Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+II விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 13 (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:235

# நாட்டில் இரத்த ஆறு ஓடினாலும் புத்தர் சிலையை அகற்ற முடியாது!

## பாதுகாப்பு செயலரிடம் பௌத்த பிக்கு தெரிவிப்பு

(திருகோணமலை)

ஐம்பதாயிரம் பேரின் உயிர்களைப் பலி கொடுத்து - நாட்டில் இரத்த ஆறு ஓடினாலும் திருகோணமலை பஸ்நிலையத்தில் நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றமாட்டோம் என்று சீனன் குடா விகாரையின் விகாராதிபதியான சுமண திஸ்ஸ தேரர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தனவிடம் தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற சர்வமதத் தலைவர்களுடனான கூட்டத்தை பௌத்த பிக்குகள் புறக்கணித்ததை அடுத்து -

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் முப்படைத் தளபதிகளும் பௌத்த பிக்குகளைச் சந்தித்துப் பேசியபோதே - சிறி சுமண திஸ்ஸ தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனன்குடா ஸ்ரீ சுமணதிஸ்ஸ விகாரையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகி மாலை 6 மணிக்குப் பின்னரும் நீடித்தது. எனினும் புத்தர்சிலையை குறித்த இடத்திலிருந்து அகற்றுவது தொடர்பாக எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை.

தாம் நிறுவிய புத்தர்சிலையை எக்காரணமும் கொண்டும் அகற்றமுடியாதென்றும் - 50 ஆயிரம் பேரைப்பலிகொடுத்து - நாட்டில் இரத்த ஆறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு பாதுகாப்பு நிலைமை; இராணுவத் தளபதி ஆராய்ந்தார்!





(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட - இங்குள்ள பாதுகாப்பு நிலைமை தொடர்பாக உயர்மட்டச் சந்திப்புக்களை மேற்கொண்டதுடன் நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

நேற்றுமுன்தினம் விமானம் மூலம் பலாலி விமானப்படைத் தளத்தை வந்தடைந்த லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவை யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் விமானப்படை தலைமை அதிகாரி எயர் வைஸ் மார்ஷல் சல்காறு ஆகியோர் வரவேற்றனர்.

இதன்பின்னர் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் இராணுவத் தளபதிக்கும் யாழ்.படைகளின் தளபதிக்கும் இடையே விசேட சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் எடுத்துக் கூறியிருந்தார்.

தொடர்ந்து 51 ஆவது மற்றும் 52 ஆவது டிவிசன்களின் தலைமையகங்களுக்குச் சென்ற இராணுவத் தளபதி அங்கு படையதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனைகளை நடத்தினார். டிவிசன் தளபதிகள் குடாநாட்டு நிலைமை குறித்து விரிவாக எடுத்துக்கூறியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகலுக்குப் பின்னர் 53 ஆவது, 55 ஆவது டிவிசன்களுக்கு விஜயம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையணிக் கட்டமைப்பு விரிவாக்கம் வெற்றிபெற்று நிற்பதை காண்கிறோம்!

### மூத்த உறுப்பினர் பாலகுமாரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

எமது தேசியத்தின் பிரதான வெளிப்பாடாக - எமது காப்பரணாக விரிவாக்கம் பெற்ற படையணியின் வரலாற்று நேர்த்தியை நாம் சந்தித்து நிற்கிறோம் என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற - விழி நிமிர்த்திய வீரம், வெல்லும்வரை செல்வோம் ஆகிய பாடல் இறுவெட்டுக்கள் அறிமுகவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு க.வே.பாலகுமாரன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

விடுதலைப் போராட்டத்தின் ஆதார அம்சமான - படையணி உருவாக்கம் எமது முக்கிய



கட்டமைப்பாகும்.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்டமைப்பு, விரிவாக்கம் அடைந்து வென்று நிற்பதை எல்லோரும் பார்க்கிறோம். எமது தேசியத்தின் பிரதான வெளிப்பாடாக - எமது காப்பரணாக விரிவாக்கம் பெற்றுள்ள படையணியுடைய வரலாற்று நேர்த்தியை நாங்கள் சந்தித்து நிற்கிறோம்.

இதை நாங்கள் சரித்திர ரீதியாக வரிகளில் எழுதிவிட்டுப் போகலாம். ஆனால், சமகாலத்தில் இவற்றை இசையுணர்வோடு, நாட்டுப்புறப் பாடல்களோடு, கர்நாடக இசையோடு மிக அண்மையில் வெளியிட்ட இந்த இறுவெட்டில் தமிழ் அஞ்ஞான இசை காணப்படுகிறது.

அவ்வாறு ஒரு மரபணியாக இந்த இசை மரபை பேணிக்கொண்டு வருகிறோம் என பாலகுமாரன் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஜே.வி.பியுடன் நடத்த சந்திரிகா திட்டம்!

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பு தொடர்பாக ஜே.வி.பியுடன் இறுதியாக நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மாளிகைத் தகவல்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தமக்கு பூரணமாக தெளிவுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி. கூறியதையடுத்தே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே ஒன்பது தடவைகள் கருத்துக்கள் பரிமாறிக்கொண்டிருப்பதனால் தமக்கும் அதுகுறித்து முழுமையாக தெரிவிக்கவேண்டுமென ஜே.வி.பி கூறியிருந்தது. இதேவேளை ஜனாதிபதியைச் சந்தித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைவிடப்பட்ட முகாமருகே பெண்ணின் எலும்புக்கூடு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு - குடத்தனைப் பகுதியில் கைவிடப்பட்ட இராணுவ மினிமுகாம் சூழலில் புதையுண்டிருந்த மனித எலும்புக்கூட்டுத் தொகுதியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் கட்டடப் பணிகளுக்காக மணல் அகழும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே இதைக் கண்டு பிடித்தனர்.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிவான், சுகாதார மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின் போது, 25 - 40 வயதுக்கு இடைப்பட்ட பெண்ணின் எலும்புக்கூடாக இது இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பெண்ணைக் கொலை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் குண்டு ஒன்றும் எலும்புக்கூட்டுக்கருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

## வாகரையில் குடும்பஸ்தர் கடத்தப்பட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாகரையிலுள்ள ஆண்டாங்குளம் என்னும் இடத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 40 வயதான முத்துலிங்கம் என்ற குடும்பஸ்தர் கருணாவின் சகாக்களால் பிடித்துச் செல்லப்பட்டு பின்னர் சூட்டுக்காயங்களுடன் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார் .

இவர் காணமல்போனது குறித்து தமக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதி காட்டில் தமது போராளிகள் தேடுதல் நடத்திய போது இவரது சடலத்தைக் கண்டு பிடித்து அவரது குடும்பத்தவர்களிடம் ஒப்படைத்ததாகவும், இதுகுறித்து திருமலை கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு முறைப்பாடு ஒன்றை தெரிவித்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர். (10)

## திருமலை கடற்படைத் தளத்தில் உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு!

(திருகோணமலை)

திருகோணமலையில் ஏற்பட்டிருக்கும் பதற்றநிலை தொடர்பாக உயர்மட்ட பாதுகாப்பு மாநாடு ஒன்று நேற்று திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணி முதல் காலை 11.30 மணி வரை சுமார் இரண்டு மணிநேரம் இந்த மாநாடு நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில், கூட்டுப் படைகளின் தளபதியும் கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சாந்த கொட்டேகொட, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா, பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, திருமலை மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பாலசூரிய மற்றும் சிரேஷ்ட இராணுவ, கடற்படை, விமானப்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

# மானிப்பாய் பரிஷ் கிண்ண இறுதியாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அழைக்கப்பட்ட 8 விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான லீக் முறையில் அமைந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று கலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இறுதிப்போட்டி 40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மூன்று வருடங்களாகச் சுற்றுப் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமலிருந்து கடந்தவருடம் முதல் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தகுதியினைப் பெற்றுக் கொண்ட சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கான தகுதியைப் பெற்றுள்ளமையும், கடந்த 15 வருடங்களாக சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் முதன் முறையக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமையாலும் இன்றைய போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்களில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தினை வெற்றிகொண்டு சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகமும், மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தினை வெற்றி கொண்டு ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் இன்றைய இறுதிப் போட்டிக்கான தகுதியினைப் பெற்றுள்ளன. (58)

## வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கரம்பொன் அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவின் ஆயத்த நாட்கள் இன்று (22-05-2005) மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செப மாலையுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு 28 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அடுத்த நாள் காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் அன்னையின் திருச்சொரூபபவனியும் இடம்பெறவுள்ளது.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கில் கடமையாற்றும் நீர் உயிர்வள ஆசிரியர்கள் அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்திலுள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவையில் ஒன்றுகூடுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

## விரைவில் நித்திய வழிபாடு

அண்மையில் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட மறவன்புலவு ஆலயத்தில் நித்திய வழிபாடு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஆலய நிர்வாக சபை மேற்கொண்டு வருகிறது. மேற்பட பகுதி மக்களால் ஆலயச் சூழல் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

## விவசாயப் போட்டிகள்

கமநலத் திணைக்களத்தினால் செப்ரெம்பர் மாதமளவில் விவசாயிகளுக்கு இடையே விவசாயப் போட்டிகள் இடம்பெறவுள்ளது. எனவே இப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் கைதடி கமநல நிலைய போதனாசிரியர் ஆ.சிவபாலனிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (29)

## முத்திரையிட கோரிக்கை

யாழ் மாவட்டத்தில் நிறுவைகள், அளவைகள் கருவிகளை வைத்திருப்போர் முத்திரையிடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் நிறுவை அளவைகளுக்கு முத்திரையிடும் பணி அந்தந்தப் பிரதேச செயலகங்களில் இடம்பெறும். பிரதேச செயலகங்களில் முத்திரையிடும் நாள் பற்றிய திகதிகள் பிரதேச செயலர் ஊடாக அறிவிக்கப்படும் என யாழ். செயலக நிறுவை அளவீட்டுப் பகுதியினர் தெரிவித்தனர்.

இதே வேளை - ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் யாழ். செயலகத்தில் முத்திரையிடும் பணி இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த்தின போட்டிகள்

வடமராட்சி வலயமட்ட தமிழ்த் தினப்போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. இன்றும் நாளையும் தொடர்ந்து இடம் பெறும் .

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இப்போட்டியில், இன்று நடனம் தனி முழுவதும்(பிரிவு 3, 2 தனி நடனம் நீங்கலாக) , நடனம் குழு -1, நாட்டிய நாடகம், நாடகம், இசையும் அசைவும், நாளை வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினாவிடைப் போட்டி, தனி நடனம் (பிரிவு - 3, 2), நாட்டுக்கூத்து என்பன இடம்பெறும். (14)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2005 க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியல் பாடம் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மல்ரி மீடியாவின்உதவியுடன் ஆசிரியர் வே. கருணாகரன் பரீட்சை எதிர்பார்ப்புகள் பற்றி கருத்துரை வழங்குவார். அங்கு அச்சிடப்பட்ட குறிப்புக்களும் வழங்கப்படும்.

பொருளியல் இரண்டாம் வினாத்தாள் பற்றிய இறுதிக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத்தோற்றவுள்ளோர் அனைவரும் கலந்து பயனடையலாம் எனக்கல்லூரி அதிபர் வி. மாணிக்கம் தெரிவித்தார்.


## சிறு விளம்பரம்

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

Pandit Nara Semanaidu
World Expert Astrologer

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பெருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்து கொள்ள தொடர்புகளுக்கு: பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836

நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1166)


# யாழ். கல்வி வலய தமிழ்த்தின போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விவலயம் நடத்தும் தமிழ் மொழித்தினப் போட்டிகள் - 2005 இன்றும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதேவேளை-

யாழ். கல்விவலய தமிழ்த்தின போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# பட்டதாரி பயிலுநர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர்களாக யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சகல பட்டதாரிகளுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட பட்டதாரி பயிலுநர் சங்கச் செயலாளர் வீ.தயாபரன் அறிவித்துள்ளார்.

பட்டதாரி பயிலுநர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் பட்டதாரி பயிலுநர் பதிவு இலக்கத்துடன் தவறாது குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட நொக் அவுட் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்திலுள்ள 11 விளையாட்டுக் கழகங்களை அழைத்துள்ளது.

இப்போட்டிகள் நேற்று முதல் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு - தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். மத்திய விளையாட்டுக் கழகம் மோதும் போட்டியும் பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதும் போட்டியும் நடைபெறவுள்ளது. (58)

## இன்று இரதோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், பிற்பகல் 3 மணிக்கு பூரணை உற்சவமும் மாலை 5.30 மணிக்கு திருவூஞ்சல் பாடலும் காட்சியும் இடம்பெற்று கொடியிறக்கமும் சண்டேஸ்வரி உற்சவமும் நடைபெறும்.

நாளை மறுதினம் பூங்காவனத் திருவிழாவும் இரவு நிகழ்வுகளாக விசேட மங்கள இசையும், யாழ். றமணனின் ராஜன்ஸ் இசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளது. (82)

## தீ மிதிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோவிலில் நாளை காலை 9 மணிக்கு பெங்கல் இடம்பெறும். பிற்பகல் 5 மணியளவில் தீமிதிப்பு நிகழ்வு இடம்பெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பெங்கல் மற்றும் அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும்.


ஸ்ரீ மாரியம்மன் மெய்யடியார்களே!

இன்றைய தினம் அம்மன் தேரில் பவனி வந்து தீமையை அழித்து. மக்கள் மத்தியில் நல்லாட்சியை உருவாக்கும் முக்கியதினம். மேலும் தேர் பஞ்ச கிருத்தியத்தில் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலுக்குரியது. ஆன்மாக்களின் ஆணவத்தை அழித்து அருள் ஞானத்தை உரு வாக்கும் புண்ணிய தினத்தில் நாம் எல்லாம் எமது மனத்தைத் தூய்மையுடைதாக்கி. எம்மைப் பீடித் துள்ள அறியாமையைப் போக்கி. தாயிடம் அழுது இரந்து நல்வாழ்வை வேண்டுவோமாக.

மேலும் எமது கோவிலில் சிறந்த தேர் ஒன்றை அம்பாளுக்கு நிர்மாணிக்க நீங்கள் எல்லாம் உதவிபுரிந்து. இத்திருப்பணியை நிறைவு செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். எமது ஆலயம் பல வழிகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. புதிதாக அறநெறிப் பாடசாலைக் குரிய மண்டபம் ஒன்றை நாம் அமைக்க முனைந்துள்ளோம். இப்போது எமது கோவிலில் நூற்றியம்பது மாணவர்கள் அறநெறி வகுப்பில் பங்கு பற்றுகின்றனர். திருநெறிக் கழகத்தின் அனுசரணையுடன் இவ்வகுப்பு நடாத்தப் படுகின்றது.

எனவே இத்தினத்தில் எமது ஆலய முன்னேற்றத்தைச் சிந்திப்பதும் சாலச் சிறந்தது. எமது தமிழ் மக்களின் துன்பங்கள் தீர்ந்து நிம்மதியான பெருவாழ்வை அளிக்கும் வண்ணம் அம்பாளிடம் மன்றாடுவோமாக.

சோ.மயில்வாகனம்,
தலைவர்,
பரிபாலனசபை மாவடி மாரி அம்மன்.

(சி/4143)



நிறைஞ்சனாஸ் சங்கானை
சிம்பு — திவ்யா நடித்த
குத்து
பஸ் போக்குவரத்து பாதை இல 782 — காரைநகர்/787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

மனோகரா யாழ்ப்பாணம்
சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா, கலாபவன் மணி மற்றும் பலர் நடித்த
ஐதன்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

சந்திரமுகி
50 ஆவது நாளை நோக்கி...
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன் (இரட்டைவேடம்), லைலா, சாயாசிங், வடிவேல் நடித்த

26 முதல்
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி நடித்த
சூர்யா
ஆக்ஷன் படம்
பு.நே: 10.30, 2.30, 6.30



## அறிவித்தல்

BANK OF TAMILEELAM

### தமிழீழ வைப்பகம்

1996.05.14ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக் கிளை 2005.05.23 ஆம் நாள் தொடக்கம் தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேலாண்மைப்பணிப்பாளர்,
தமிழீழ வைப்பகம்.

(சி/3657)



55 ஆவது ஆண்டில்....
ராஜு ஸ்ரோர்ஸ் ஸ்தாபனம்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். Tele Phone: 5224
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
Western union மூலமாகப் பணம் மாற்றும் அனைவருக்கும் எமது தனிப்பட்ட அன்பளிப்புக்கள் உண்டு.
WEL COME
SO MUCH CHOICE
RAJU STORES
JAFFNA.
(சி/4123)

# சேது சமுத்திர திட்டம் ஆரம்பித்தால் எதிர்கொள்ள மாற்றுத்திட்டம் தயார்

## அமைச்சர் மங்கள சமரவீர



இந்திய அரசாங்கம் சேது சமுத்திரத் திட்டத்தை ஆரம்பித்தால், அதனால் ஏற்படும் எதிர்விளைவுகளை எதிர்கொள்ள மாற்றுத் திட்டம் தயாரிக் கப்பட்டுவிட்டதாக துறைமுக மற்றும் விமானசேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றின்போது, சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் அங்கு கூறுகையில் -

இந்தியாவின் சேது சமுத்திரத்திட்டத்தால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் தொடர்பாக ஆராய, அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமை வகிப்பதுடன், ஏனைய பல அமைச்சுகளின் பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டு வருகிறது. அத்தோடு, சேது சமுத்திரத்திட்டத்துடன் சம்பந்தமுடைய பிரதேசங்களைக் கண்காணிக்கவும் சில அணிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும், இந்தத் திட்டத்தால் இலங்கைக்கு ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்ளத் தேவையான மாற்று நடவடிக்கைகளும் கண்டறியப்பட்டுள்ளன. இதேவேளை, கடந்த ஆட்சிக் காலத்தின்போது துறைமுக அமைச்சராக ரவூப் ஹக்கீம் பதவி வகித்தவேளை, மோசடிகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஊடகவிய லாளரொருவர் வினவியபோது,

இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தக் குழுவின் விசாரணைகளின் முடிவில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளுக்கு அமைய, நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் கூறினார்.

# பொதுக்கட்டமைப்பு குறித்து சந்திரிகா சாதகமாக முடிவெடுப்பது சந்தேகமே!

## ஜெகான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பை நிறுவுவது கடினமானதாக இருக்குமென தேசிய சமாதானப் பேரவையின் ஊடகப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும தெரிவித்ததாவது -

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு, ஆதரவான மற்றும் எதிரான சக்திகள் உள்ளன. முன்னோக்கிச் செல்வோமானால் ,விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்ள வேண்டுமென்பது தெளிவாகிறது. ஏனெனில், கிழக்கில் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து செல்கிறது.

இது குறித்து விடுதலைப்புலிகளும் அதிக விரக்தி அடைந்துள்ளனர்.

பொதுக்கட்டமைப்பை நிறுவ முடியுமா என்பதோடு, ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தையும், அவரை எதிர்க்கின்றவர்களுக்கு இருக்கும் அதிகாரத்தையும் பொறுத்தே அமையும்.

கொள்கை ரீதியில், நிறைவேற்று ஜனாதிபதி, அரசின் தலைவர், முப்படைகளின் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அதிக பலமுள்ளது. ஆனால் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலம்மிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை எதிர்கொள்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுள்ளும் அவருக்கு மறைமுக எதிர்ப்பு உள்ளது.

எனவே தனியே நின்று இந்த எதிர்ப்புகளை எதிர்கொள்வது ஜனாதிபதிக்கு சிரமமாக இருக்கும். வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளுடன் தளம்பல் நிலையிலிருத்தல் அல்லது தெற்கில் அரசியல் காரணமாக தளம்பல் நிலையிலிருந்தல் என்பனவே ஜனாதிபதிக்கான தெரிவாக உள்ளன.

ஜனாதிபதியின் கடந்தகால நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, சாதகமான முடிவுக்கு வருவது சிரமமாக இருக்கும். ஏனெனில் ஜனாதிபதியும், அமைச்சரவையும், இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றை மறுசீரமைப்புச் செய்ய சில தீர்மானங்களை மேற்கொண்டபோதும், அவற்றுக்குக் காட்டப்பட்ட பலமான எதிர்ப்பையடுத்து அவை மீளப்பெறப்பட்டதுடன் அவை நடைமுறைப்படுத்தப்படவுமில்லை.

எனவே தற்போதைய நிலைமை நம்பிக்கை தருவதாக இல்லை. வடக்கு - கிழக்கில் ஜனாதிபதி யுத்தத்தை ஆரம்பித்தால், அதாவது தளம்பல் நிலையிலிருந்தால், அது பாரிய ஆபத்தாகவே முடியும். எனவே முன்னோக்கிய செயற்திட்டத்துக்கு நாம் ஆதரவளிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

### பொதுக்கட்டமைப்புக் குறித்த

# சந்திரிகாவின் நடவடிக்கைகளுக்கு சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் ஆதரவு!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் முழு ஆதரவை வழங்குவதென சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு இந்தத் தீர்மானத்தை எடுத்தது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவது சம்பந்தமாக ஜே.வி.பி. காட்டிவரும் எதிர்ப்புகள் பற்றி சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா விளக்கிக்கூறியதாகவும், அப்போது அங்கு. சமுகமளித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு ஆதரவளித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் சட்டபூர்வமாக விலகும் காலக்கெடு பூர்த்தி

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து, தப்பியோடியவர்கள் தம்மைச் சட்டபூர்வமாக இராணுவத்திலிருந்து வெளியேற்றிக் கொள்வதற்கான காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய சுமார் 4 ஆயிரத்து 500 படையினர் தம்மை உத்தியோகபூர்வமாக படைகளிலிருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய மேலும் ஆயிரக்கணக்கானோர், இன்னமும் தம்மை உத்தியோகபூர்வ. படைகளிலிருந்து விலக்கிக் கொள்ளாததால் - அடுத்தகட்டமாக மாகாண ரீதியாகப் படையினர் தம்மை உத்தியோகபூர்வமாக படைகளிலிருந்து விலக்கிக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இராணுவத்திலிருந்து சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தப்பியோடியிருப்பதாகவும், இவர்களால் நாட்டில் பல்வேறு சட்ட ஒழுங்குகள் பிரச்சினைகளும், வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாகவும் பல தடவைகள் இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுவந்தது.

தப்பியோடிய இராணுவத்தினர் பலர் ஆயுதங்களுடனே ஓடியிருப்பதால், பல பாதாள உலகக் குழுக்களுக்கு இவர்கள் மூலமாக அதிநவீன ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதுடன், தப்பியோடிய இராணுவத்தினரே பாதாள உலகக் குழுக்களாக மாறியுள்ளதாகவும், பொலிஸ் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் அதிகரித்துச் செல்லும் வன்முறைகளுக்கு இதுவே பல வழிகளிலும் காரணமாக இருப்பதாகவும்த அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

### லஞ்சம் பெற்ற கிராம அலுவலர் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு நிவாரண அட்டைகள் வழங்குவதற்கென ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெற்ற கிராம சேவையாளரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

புல்மோட்டை பிரதேசத்தை சேர்ந்த கிராமசேவையாளர் ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவராவார்.

நிவாரண உணவு பங்கீட்டு அட்டைகள் வழங்குவதற்கு லஞ்சம் கோரினார் என்ற முறைப்பாட்டையடுத்து லஞ்ச ஊழல் விசாரணைக்குழு நடத்திய விசாரணைகளின் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பமொன்று தமது பாதிப்புகள் தொடர்பான விபரத்தை கிராம சேவையாளரிடம் வழங்கிய போதிலும், அவர்களுக்கு நிவாரணங்கள் எதுவும் கிடைக்க வில்லையென ஆணைக்குழு நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

பின் னர் 500 ரூபாவை இவர் பெற்றுக் கொண்டு நான்கு நிவாரண அட்டைகளுக்குப் பதிலாக இரண்டு அட்டைகளை வழங்கியதாகவும் ஏனைய இரண்டு அட்டைகளை வழங்குவதற்கு ஆயிரம் ரூபாவை இவர் கோரியதாகவும் இணைக் குழு அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்தார்.

# இலங்கை விவகாரத்தில் இந்தியா இனியும் பொறுமைகாக்க கூடாதாம்!

## இந்திய கேணல் ஹரிகரன் தெரிவிப்பு

(புதுடெல்லி)

விடுதலைப்புலிகளின் விமானப் படை - இந்தியாவினதும், இலங்கையினதும் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் பாரிய அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. அதனால் இலங்கை விவகாரத்தில் இந்தியா இனியும் பொறுமையாக இருக்காமல், விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என, இந்தியப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதிகளில் இங்கு இந்தியப் புலனாய்வு பிரிவுத் தலைவராக பதவி வகித்தவரும், இராணுவ புலனாய்வுத் துறை சார் நிபுணருமான கேணல் ஆர்.ஹரிஹரன் 'த ஹிந்து' நாளிதழில் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'புலிகளின் வான்படைவலுவும் அதன் அபாயமும்' என்ற தலைப்பில் அவர் வரைந்துள்ள அந்தக் கட்டுரையில் - ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்ளவும் தமது இராணுவ பலத்தை மேலும் வலுப்படுத்தவும், சமாதான முயற்சிகளைப் சாதகமாகப் பயன்படுத்தும் விடுதலைப்புலிகளின் வழமையான பாணிக்கு தற்போதைய காலப்பகுதியும் ஏதுவாக அமைந்துள்ளது.

தமது படைகளின் மன உறுதியை பேணுவது, புதிய நடவடிக்கைகள் தொடர்பான வியூகங்களை வழிகளின் ஊடாக விடுதலைப்புலிகள் தம்மை இந்தக்காலப் பகுதியில் வலுப்படுத்தியுள்ளனர்.

சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல், கடந்த 2004 ஆம் ஆண்டு நடுப்பகுதிவரை சுமார் 11 கப்பல்களில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளனர்.

எனினும், திறனற்ற கண்காணிப்புக்குழு அறிக்கைகளில் மட்டுமே தனது பணியை ஆற்றும் கையாலாகாத அமைப்பாக இங்கு செயற்பட்டு வருகிறது. தென்னிலங்கையில் காணப்படும் அரசியல் இழுபறி, சமாதான முயற்சிகள் மேலும் காலம் தாழ்த்தப்படுவது என்பன

புலிகள் பெருமளவான நிதி, சக்தி, நேரம் போன்ற வளங்களை மூலதனமாக் கொண்டு தமது வான்படையை நேர்த்தியாக நிறுவ ஒரு வகையில் வழிகோலியுள்ளது.

இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியிலேயே, விடுதலைப் புலிகளுக்கு வான்படை அமைக்கும் இலக்கு இருந்தது.

சிறிய விமானங்களுக்கான உதிரிப்பாகங்களை அப்போதே விடுதலைப்புலிகளின் இரகசிய இடங்களிலிருந்து மீட்டது. அவர்களின் தொழில்நுட்ப பொறி யியல் பகுதி ஒன்றிலிருந்து இலங்கை இராணுவமும் அப்போது விடுதலைப் புலிகளின் விமான உதிரிப்பாகங்களை மீட்டிருந்தது.

1988 இன் பிற்பகுதியில் விமான எதிர்ப்பு ஏவுகணை, ராடர் தொழில் நுட்பம், கடற்படை என பின்னர் வளர்ச்சி கண்ட விடுதலைப்புலிகள் - இன்று வான் படை அமைப்பையும் அமைத்து, தம்மை ஒரு முழுமையான இராணுவமாக்கும் முயற்சியில் இறக்கியுள்ளனர்.

அமெரிக்காவினதும், ஐரோப்பிய ஒன்றியத்தினதும் கட்டுப்பாடுகள், தடைகள் அமுலில் உள்ள போதும், விடுதலைப்புலிகள் பெருமளவான நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களைக் கொண்டு வந்து, தமது திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இது இலங்கைக்கோ, அதற்கு மிகவும் அயலில் உள்ள இந்தியாவுக்கோ ஆரோக்கியமான தல்ல. தம்மை ஒரு முழுமையான படைக் கட்டமைப்பாகக் கட்டியெழுப்பியிருக்கும் விடுதலைப் புலிகள் - அடுத்த தடவை அரசுடன் சமாதான பேச்சுக்களுக்காகத் தயாராகும் போது, பேரம் பேசக்கூடிய வலுவான சக்தியாக இருக்கப் போகிறார்கள்.


இது இந்தியாவினதும், இலங்கையினதும் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் நிலையை உருவாக்கியுள்ளது.

இந்தியாமீது கொமாண்டோ பாணியிலான வான்தாக்குதலை மேற்கொள்ளவல்ல வலுவைக் கொண்டுள்ள விடுதலைப்புலிகளின் வான்படை சக்தி குறித்து, இந் திய அரசு விழிப்படையவேண்டும்.

தனது படைகளைக் கண்காணிப்புப்பணிகளில் உசாராக்கி நாட்டின் பாதுகாப்பு மீதான அவதானத்தை மேலும் அதிகரிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் எங்கிருந்து விமான உதிர்பாகங்களை பெறுகிறார்கள், வான்கலங்களுக்கு எங்கு எரிபொருள்களைப் பெறுகிறார்கள், வான் புலிகளுக்குஎங்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன என்பன குறித்த தகவல்களையும் இந்தியா தனது புலனாய்வு அமைப்புகளை உசாராக்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் ஹரிகரன் எழுதிய கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

# பிரெஞ் ஓபன் ரெனிஸிலிருந்து செரீனா, ஹெவிட் விலகினர்!



(பரிஸ்)

தோள்பட்டை காயம் காரணமாக செரீனாவும், விலா எலும்பு முறிந்ததாக ஹெவிட்டும் பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டிகளில் விளையாடவில்லை.

பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி நாளை தொடங்கவுள்ளது. இதற்கான டிரோ நடவடிக்கைகள் நேற்று ஆரம்பித்தன. அதாவது யாருடன் யார் மோதுவது என்பதை முடிவுசெய்ய இந்த டிரோ நடவடிக்கை தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்தநிலையில், புகழ்பெற்ற மகளிர் பிரிவு ரெனிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ் பிரெஞ் ஓபன் ரெனிஸில் தான் விளையாடவில்லையென்பதை நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்தார். தோள்பட்டைக் காயம் காரணமாக நான் பிரெஞ் ஓபன் ரெனிஸிலிருந்து விலகுகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

23வயதாகும் செரினா வில்லியம்ஸ் அமெரிக்காவைச் சேர்ந்தவர். 2002ஆம் ஆண்டு அவர் பிரெஞ் ஓபன் ரெனிஸ் சம்பியன் பட்டத்தை வென்றவர். கடந்த மாதம் அமெலியா தீவில் இத்தாலிய வீராங்கனை சில்வியாவை எதிர்த்து காலிறுதிப் போட்டியொன்றில் செரினா வில்லியம்ஸ் விளையாடிய போது அவருக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது.

இந்தக் காயம் காரணமாக பெடரேசன் கிண்ண போட்டியிலும் செரினா வில்லியம்ஸ் விளையாடவில்லை. அடுத்து இப்போது பிரெஞ் ஓபன் ரெனிஸிலும் விளையாட முடியாமல் போய்விட்டது. ஆனால் இடையிலே ரோம் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டியில் செரினா கலந்து கொண்டார்.

ஆனால், சரியாக அந்தப் போட்டியில் விளையாட முடியவில்லை. எனவே முதற்சுற்று ஆட்டத்திலேயே செரினா வில்லியம்ஸ் தோற்றுப் போனார்.

இனிமேல் பேர்லின் நகரில் நடைபெறவுள்ள ஜேர்மன் ஓபன் ரெனிஸில் கலந்துகொள்ள செரினா வில்லியம்ஸ் திட்டமிட்டுள்ளார். அதற்குள் தோள்பட்டைக் காயத்திலிருந்து விடுபடுவதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள அவர் முடிவு செய்துள்ளார்.

இதேவேளை பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டி பங்கேற்பிலிருந்து அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த உலகின் இரண்டாம் நிலை வீரர் லெய்டன் ஹெவிட் விலகியுள்ளார்.



இரண்டு வாரங்களுக்கு முன்பு சிட்னியில் தனது வீட்டில் தவறி விழுந்ததில் விலா எலும்பில் காயமடைந்துள்ளார் ஹெவிட். அதிலிருந்து இன்னும் முழுமையாகக் குணமாகாததால், அவர் பிரெஞ் ஓபன் போட்டியிலிருந்து விலகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்திலிருந்து குணமடைந்து வருகிறேன். இந்தநிலையில் நாளை தொடங்கும் பிரெஞ் ஓபனில் பங்கேற்றால் காயம் குணமாக மேலும் காலமாகும். ஆதலால் டொக்டர்களின் அறிவுரைப்படி ஓய்வெடுத்து வருகிறேன். இந்தவாரம் ஜேர்மனியில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியிலும் பங்கேற்கவில்லையென ஹெவிட் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு

# பயிற்சியாளர் நியமனத்தில் தனக்குத் தொடர்பில்லையாம்!

## கப்டன் சிமித் சொல்கிறார்

(டேர்பன்)

தென்னாபிரிக்க அணியின் புதிய பயிற்சியாளர் நியமனத்தில் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்று கப்டன் சிமித் விளக்கமளித்துள்ளார்.


ரே ஜென்னிங்ஸ் பதவிக்காலம் முடிந்ததையடுத்து, அதிகம் அறிமுகமில்லாத மிக்கி ஆதர் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். 37வயதான ஆதர் அனுபவம் மிக்கவர். உள்ளூர் போட்டிகளில் பிரபலமான இவர் சர்வதேச அளவில் பங்கேற்றதில்லை. அவர் சிறந்த பயிற்சியாளராக விளங்கியதால், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வாய்ப்பளித்தது.

இவரது பெயரை 6பேர் குழு ஏகமனதாக பரிந்துரை செய்தது. வீரர்கள் மத்தியிலும் ஆதரவுள்ளது.

இது பற்றி தென்னாபிரிக்க கப்டன் சிமித் செய்தியாளர்களிடம் கூறுகையில்-

மிக்கி ஆதரின் நியமனத்தில் எனக்கு எந்தவித தொடர்பும் கிடையாது. நானும் ஜென்னிங்ஸும் பலமுறை வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளோம். அது கப்டன்-பயிற்சியாளரிடையே வழக்கமாக நடக்கும் வாக்குவாதம். புதிய பயிற்சியாளரை தெரிவு செய்த முறை திருப்தி அளித்தது.

ஆதர் மிகவும்கண்டிப்பானவர். இவரது பயிற்சியில் அணி சிறப்பான வளர்ச்சி காணும் என்று சிமித் நம்பிக்கை தெரிவித்தார்.



சமீபத்தில் தென்னாபிரிக்க அணி, மேற்கிந்திய பயணத்தை வெற்றிகரமாக முடித்தது. அடுத்ததாக இந்தியாவுடன் 5 ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் தொடர் மிக்கி ஆதருக்கு பெரும் சவாலாக அமையும். இது பற்றி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைமைச் செயலக அலுவலர் ஜெரால்ட் மயோலா கூறுகையில் -

எதிர்வரும் செப்ரெம்பரில் இந்தியா சென்று ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடத் திட்டமிடப்பட்டுள்ளது. அட்டவணை தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையுடன் விவாதித்து வருகிறோம் என்றார்.

# இலங்கை அணி பயிற்சியாளராக றொம் மூடிக்கே அதிகம் வாய்ப்பு!

(கொழும்பு)



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் தெரிவில் பங்கேற்றவர்களில் அவுஸ்ரேலிய வீரர் றொம் மூடியும் ஒருவர். ஆனால் அவர் தெரிவுசெய்யப்படவில்லை. இந்தநிலையில், அவருக்கு இலங்கை கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராக வாய்ப்புக் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை பயிற்சியாளராக இருந்த ஜோன் டைசனின் பதவிக்காலம் கடந்த மாதத்துடன் முடிந்துவிட்டது.

எனவே, புதிய பயிற்சியாளர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வு அடுத்தவாரம் நடைபெறவுள்ளது. இதில் றொம் மூடி கலந்துகொள்கிறார். அவரைத் தெரிந்தெடுக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

# உதைபந்தாட்டப் போட்டி

(புத்தூர்)

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பி.ப. 3மணிக்கு புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள விஷேட காட்சிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

# வீனஸ் வெற்றி!



(இஸ்தான்புல்)

இஸ்தான்புல்லில் நடைபெற்றுவரும் இஸ்தான்புல் கிண்ணத்துக்கான சர்வதேச ரெனிஸ் போட்டியில், ரஷ்யாவின் அன்னா சாக்வெட்சேவுக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 6-2, 6-2என வெற்றி பெற்றார்.


# VACANCIES

## MEDIA RESOURCES AND TRAINING CENTRE

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

Media Resources and Training Centre is training the journalists in various aspects of journalism. It strives to uplift the capacity of the working journalists in Jaffna. It is planning to have a full time Diploma Course and we need energetic and devoted persons as Training Coordinator and Trainer. Therefore, the Media Resources and Training Centre will entertain applications from suitably qualified persons up to 15.06.2005 for the following posts (on contract)

1. **Training Co-ordinator**
   Salary : Negotiable
   Qualification:
   - Experience in Training with an experience in a Media for a considerable time.
   - Desirable to those who have a good knowledge of Tamil and English Language and communicative skills and knowledge of Information and Communication Technology.
   - With drive and passion for journalism. Ready to work outside ordinary working hours.

Submit a written note not exceeding 5 pages outlining your ideas and visions for media and training in Jaffna.

2. **Trainers**
   Salary : Negotiable
   Qualification:
   - Preference will be given to those who have experience in editing a Tamil news paper or work experience in a Media for a considerable period of time.
   - Desirable to those who have a good knowledge of Tamil and English Language and communicative skills and knowledge of Information and Communication Technology.

Application forms and other details may be obtained from the office of the Media Resources and Training Centre at 84, Jumma Mosque Lane, Jaffna OR You could download application form from the Home Page of University of Jaffna. Web Address: www.jfn.ac.lk A copy of the application should be submitted through E.mail also. E.mail address: sanmuga2003@yahoo.com Those who are selected by the Search Committee will be notified on 15.07.2005. The selected candidates will commence their work on 1st September 2005.

Applications received after the closing date will be rejected without intimation.

**Director,**
**Media Resources and Training Centre.**
**University of Jaffna.**
**Sri Lanka.**

(C/4134)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விளையாட்டு விழா

(மூளாய்)

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு விழா - நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மன்ற முன்றலில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் க. துளசிதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

### தேர்த் திருவிழா

வேலணை மேற்கு பெரிய புலம் அருள்மிகு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்று பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறும், நாளை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

தினமும் மாலை 6 மணிக்கு கான சுதாகரநிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'கம்பராமாயணம்' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை ஸ்ரீ ராமபட்டாபிஷேகத்துடன் தீர்த்தத் திருவிழா வன்று பூர்த்தியாகும்.

### பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் அழிப்பு

உணவு விற்பனை நிலையங்களில் கடந்த 13 ஆம் திகதி திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட யாழ். மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர் குழு -அங்கிருந்த சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட மனித பாவனைக்குதவாத வடை, இடியப்பம், மலிபன் பிஸ்கட், தோடம்பழம், அப்பிள், பிட்டு, மிக்சர், கச்சான் போன்றவற்றைக் கைப்பற்றி - உரிமையாளர் சம்மதத்துடன் முற்றாக அழித்தது.

### பயிற்சிப் பட்டறை

வட பிரதேச வர்த்தக அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'ஸ்ரேக்கோல்டர்' எனும் பயிற்சிப் பட்டறை - எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே. கணேஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

## தென்னிந்திய திருச்சபையின் நிர்வாக கூட்டத்தை நடத்த யாழ். நீதிமன்றம் தடை!

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்னிந்திய திருச்சபையின் நிர்வாகக் குழுக்கூட்டத்தை, நீதிமன்றத்தின் மறு அறிவித்தல் வரை கூட்ட முடியாது என, யாழ். நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

தென்னிந்திய திருச்சபையின் நிர்வாக சட்ட திட்டங்களுக்கு அமைய - நிர்வாகக் குழுவில் 25 வீதமானோர் 35 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும். அவ்வாறு நிர்வாகக் குழுவில் அங்கத்தவர் எவரும் இல்லாத காரணத்தால், நிர்வாகக்குழு இயங்கமுடியாது என யாழ். நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ். நீதிமன்றம் நிர்வாகக் குழுக்கூட்டத்தை நடத்துவதற்குத் தடை விதித்ததுடன், நிர்வாகக்குழு அவசரம் கூட்ட வேண்டிய தேவை ஏற்படின் - நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே கூட்டத்தை நடத்தமுடியும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும் நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்து, திகதி நிர்ணயம் செய்யப்பட்டு, நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பிய பின்னர் கூட்டம் நடத்துவதற்கான அனுமதி கோரி யாழ். நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி - நீதிமன்றத்தின் கட்டளையை அவமதித்தமைக்கு கடுமையாக எச்சரித்ததுடன், நீதிமன்றத்தின் மறு அறிவித்தல் வரை கூட்டத்தை நடத்தக்கூடாதெனவும் உத்தரவிட்டார்.

## இளையதம்பி நினைவாக மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

பிரபல மாட்டு வண்டிச் சவாரியாளர் செ.இளையதம்பியின் 14 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு மகேசன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி -இன்று பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி சோனப்பு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தின் அதிபர் இ.இராகவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் -

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா, கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ந.இன்பன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

## லொத்தர் விற்பனை நிலையம் அமைக்க யாழ். நீதிமன்றம் அனுமதி மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் உள்ள தேசிய லொத்தர் சபை விற்பனை நிலையத்துக்கு - அந்த இடத்தில் நிரந்தரக்கட்டடம் எதுவும் அமைக்க வேண்டாமென, யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி .விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.நகரப்பகுதியில் தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனை நிலையம் - தமது விற்பனை நிலையம் அமைந்துள்ள இடத்தில் [illegible]ய நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு யாழ்.மாநகரசபை அனுமதி மறுத்தது.

இதற்கு எதிராக யாழ்ப்பாண விற்பனை முகவர் யாழ்.நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி மக்கள் நடமாட்டம் அதிகமாகவுள்ள இந்தப் பகுதியில், தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனை நிலையம் அமைப்பதால், விபத்துக்கள் ஏற்படுவதுடன் சன நெருக்கடியும் ஏற்படும் என்பதால்-

நிரந்தரக் கட்டடங்கள் எவற்றையும் தற்போது விற்பனை செய்யும் இடத்தில் அமைக்க வேண்டாம் என உத்தரவிட்டதுடன், இந்த வழக்குத் தொடர்பாக யாழ். மாநகர சபைக்கு ஏற்பட்ட செலவைக் குறித்த வழக்காளி செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

### நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் மானிப்பாய் பிராந்திய சமாதான குழு உறுப்பினர்களுக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி கருத்தரங்கு - இன்று காலை அகவெளி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு தொடர்ந்து 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## நயினாதீவு உற்சவம் தொடர்பாக செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் புகழ்பெற்ற நயினைநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த ஊற்சவம் தொடர்பான கலந்துரையாடல் - நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ . சிவசுவாமி , வேலணை பிரதேச செயலர் நந்தகோபாலன், ஊர்காவற்துறை பிரதேச செயலர் ஸ்ரீ மோகனன் மற்றும் கடற்படை, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது நயினாதீவு உற்சவத்தின்போது யாழ்ப்பாணத்திலிருந்து பக்தர்கள் செல்வதற்கான போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகள் சம்பந்தமாகவும் மற்றும் உற்சவ காலங்களின்போது ஆலய சுற்றாடலில் சுகாதாரம் பேணப்படல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த வருடத்தை விட, இந்த முறை சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறும் என யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

## சங்கானை தேவாலய வீதி நிகொட் உதவியுடன் புனரமைப்பு

(சங்கானை)

சங்கானை சந்தையிலிருந்து ஆரம்பமாகி, தேவாலய வீதியைச் சென்றடையும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமுள்ள பாதை - கடந்த 30 வருடங்களின் பின் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

நிகொட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து புதிதாகப் புனரமைப்புச் செய்து முடிக்கப்பட்டுள்ள இந்தப் பாதை - மக்களின் நீண்டநாள் போக்குவரத்துச் சிரமங்களை வெகுவாகக் குறைத்துள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

வலிகாமம் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடனும், வலி மேற்குப் பிரதேச சபையின் மதிப்பீடு மேற்பார்வையின் கீழ் - சங்கானை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இந்தப் பாதைத் திருத்தத்துக்கான ஒப்பந்தத்தைப் பெற்று, இதனை நிறைவேற்றியுள்ளனர். (48)

### கராத்தே போட்டிக்கான வீரர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கராத்தே சங்கம் நடத்தும் வடக்கு- கிழக்கு மாகாண மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் - பங்கு பற்றுவதற்கான யாழ். மாவட்ட வீர வீரங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு, இன்று காலை 8 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஜேறோம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்ட கராத்தே சங்கத்தில் அங்கத்துவம் பெறும் கழகங்களின் வீர, வீராங்கனைகள் தமது கழக பிரதம ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் சென்செய் தி.துஷானந் கேட்டுள்ளார். (55)

## முன்பள்ளி விளையாட்டு விழா

கெற்பேலி - சிவசக்தி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், தென்மராட்சி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் எஸ்.புஸ்பராணி, (பிரதேச இணைப்பாளர் முன்பள்ளி, தென்மராட்சி) தலைமை தாங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும், சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ம.இ.வி.ரவிச்சந்திரனும், அருட்தந்தை அருள்நேசனும், தென்மராட்சிப் அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (24)

◆ ◆ ◆

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமுக நிலைய பாலர் கல்விக்கழக வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி - இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும் , சிறப்பு விருந்தினர்களாக ஐ.ஒ.எம் திட்ட அலுவலர் ரி.ஜே .ஜெனராஜ், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஐ.கிறிஷாலன்

முகவரி : வதிரி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.


## சின்னஞ்சிறு செய்திகள்

### திருட்டு சந்தேக நபருக்கு 5 வருட சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

நீர் இறைக்கும் இயந்திரமொன்றைத் திருடிய நபர் ஒருவருக்கு ஐந்து வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றைத் திருடியதாக சந்தேகத்தின் பெயரில் இருவர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதிபதி - முதலாவது சந்தேகநகருக்கு ஐந்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், இரண்டாவது சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டார்.

### நெடுந்தீவு அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்துக்கான- 2005 ஆம் ஆண்டுக்கான மாகாண சபை நிதி ஒதுக்கீடுகள் மூலம் சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பின்தங்கிய கிராமங்களுக்கென குறித்தொதுக்கப்பட்ட நிதிமூலம் கோட்டைக்காடு, பனங்காணி வீதி அமைப்பு, சாறாப்பிட்டி குடிநீர் விநியோக இயந்திரப்பகுதி புனரமைப்பு, குடிநீர் விநியோகத் தொட்டிகள் புனரமைப்பு, சாறாப்பிட்டி குடிநீர் கிணறுகள் திருத்தம் ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (113)

### கணிப்பீட்டுப் புள்ளிகளை ஒப்படைக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டு முதல் முறையாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் - பாடசாலை மட்டக் கணிப்பீட்டின்போது, அந்தந்தப் பாடங்களுக்காகப் பெற்றுக்கொண்ட இறுதிப் புள்ளிகளைப் பதிவதற்கான பட்டியல்கள் பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியல்களைப் பிழையின்றிப் பூரணப்படுத்தி, 31.05. 2005 இற்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (122)

### நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் உதவியாளர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை - எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சையை உறுதிப்படுத்தி, யாழ். செயலகத்தால் விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(சங்கானை)

சங்கானை பஸ்தரிப்பு நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் - வலி. மேற்குப் பிரதேச சபையால் பிடித்து அழிக்கப்பட்டன.

இந்தப் பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் நாய்களால் பல்வேறு விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்றன.

இதனையடுத்தே இந்தப் பகுதிகளில் கட்டாக்காலிகளாக அலைந்து திரிந்த நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன.

# விளையாட்டு அரங்கம்



## அப்பழுக்கற்ற கரங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென்று இலங்கை கிரிக்கெட் வீரர்களால் உருவாக்கப்பட்டதே CRICKET AID. இதன் அங்கத்தவர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிளிநொச்சிக்குச் சென்று உறவுகளை இழந்து நிற்கும் இருநூறு சிறார்களுக்கு அவர்களின் எதிர்காலத்திற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

திலங்க சுமதிபாலவின் தலைமையில் இயங்கிய கிரிக்கெட் சபையானது. இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சரால் பதவி ஒழிக்கப்பட்டபோது CRICKET AID தொடர்ந்தும் இயங்கமுடியுமா என்றதொரு வினா எழுந்தது உண்மையே. ஆனால் நல்லதொரு செயலைச் செய்வதற்குத் துணியும் ஒருவரை எதுவும் தடுக்க முடியாது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

இந்தத் திட்டத்தின் பிதாமகன் திலங்க. கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துக்கூறும் போது- இந்தப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தரப்பினரோடு இணைந்து CRICKET AID செயலாற்ற முடியுமாயின் ஏன் மற்றவர்களால் முடியாது. நம்பிக்கை என்று ஒன்றிருந்தால் எதுவும் தடையாகிவிடமுடியாது என்று கூறியிருக்கிறார். செயற்பாடில்லாமல் வாய்ப்பந்தல் போடுபவர்களுக்கு மறைமுகமான சாட்டையடிபோல இவரது கருத்துத் தோன்றுகிறது. இதற்கும் அப்பால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இணக்கப்பாட்டுக்கு வந்து செயல்வடிவம் கொடுக்க முடியாமல் தத்தளிக்கும் அரசுக்கும் ஒரு இடியாக இருக்கிறது.




CRICKET AID தற்போது செயற்படுத்தியுள்ள திட்டத்தின்படி சிறார்களுக்கு காப்புறுதி வசதி. வைத்திய வசதி. மாதாந்தக் கொடுப்பனவு. பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்றவை பிரதானமாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு சிறாருக்குமான உதவிக் கால எல்லை பத்து வருடங்களாக இருக்கும். இந்த நிகழ்வில் கலந்துகொண்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா கருத்துக்கூறும்போது - பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தி சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வராத அரசாங்கத்தின் இயலாமையை கண்டித்ததுடன். எமது சிறார்களுக்கு உதவ முன்வந்துள்ள CRICKET AID அமைப்பைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

தென் இலங்கையில் இருந்து எமது மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டு எத்தனையோ செய்ய விரும்புகிறோம். ஆனால் பல தடைகள் உள்ளன என்று நரித்தனமாக ஊளையிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெளிவான செய்தியொன்றை CRICKET AID நிகழ்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது நல்ல சிந்தனைகளோடு. தெளிந்த மனதோடு உண்மையானவர்களாகத் தாயகத்துக்கு வாருங்கள். எங்கள் கரங்கள் உங்களோடு இணையும் என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார். தென்னிலங்கையில் இருந்து கொண்டு பூச்சாண்டி காட்டுபவர்கள் இதனைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.




இந்த நிகழ்வில் இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தபத்து. வேகப்பந்து வீச்சாளர் ருச்சிர பெரேரா. முன்னாள் தலைவர் ஹஷான் திலகரட்ண ஆகியோரும் கலந்து கொண்டனர்.

– நிர்மலன்

## நிலை தடுமாறும் நிதர்சனங்கள்



2005/06 ஆம் ஆண்டுக்கான ICC EMIRATES ELITE PANAL நடுவர்கள் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை சென்ற வாரம் வெளியிட்டுள்ளது. அத்தோடு EMIRATES ELITE PANAL நடுவர்களுக்கு உறுதுணையாக அந்தந்த கிரிக்கெட் சபைகளால் நியமனம் செய்யப்படும் EMIRATES சர்வதேச நடுவர்கள் 30 பேரின் பட்டியலையும் அறிவித்துள்ளது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பத்து நாடுகளில் இருந்தும் தலா 3 பேர் வீதம் நடுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ELITE PANAL நடுவர்கள் எந்தவொரு நாட்டுக்கும் சென்று நடுவராகக் கடமையாற்றக் கூடிய தகுதி பெற்றவர்கள். ஆனால் சர்வதேச நடுவர்கள் சொந்த நாட்டில் நடைபெறும் போட்டிகளில் மட்டுமே கலந்துகொள்ள முடியும். அவர்களால் வேறு நாடுகளுக்கு நடுவராக கடமைபுரியச் செல்லமுடியாது. இந்தத் தெரிவில்தான் இப்போது சர்ச்சை தோன்றியுள்ளது.

ICCயால் 2002ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அதி உயர் தரம் வாய்ந்த ELITE PANAL நடுவர்கள் 11பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் கடந்த உலக கிண்ணப் போட்டிகளின் பின்னர் இலங்கையைச் சேர்ந்த அசோக டீசில்வா , தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஒச்சார்ட் மற்றும் சிம்பாப்வேயைச் சேர்ந்த ரஸல் ரிபின் ஆகியோர் அதிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.



இப்போது அறிவிக்கப்பட்ட ELITE PANAL பட்டியலில் இந்தியாவின் குண்டப்பா விஸ்வநாத் நீக்கப்பட்டதைப் போன்றல்ல இவர்களது நீக்கம். விஸ்வநாத்தின் மூன்று வருடகால ஒப்பந்தம் முடிவுக்கு வந்தமையாலேயே அவர் இதில் இடம்பெறவில்லை. ஆனால் அசோக டீ சில்வா, ரஸல் ரிபின் ஆகியோர் வழங்கிய பல தீர்ப்புக்கள் சர்ச்சைக்குள்ளாகியதாலேயே, ICC அவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவர்களை பணியிலிருந்து இடை நிறுத்தியது. குறிப்பாக இவர்களில் அசோக டீ சில்வாவின் LBW தீர்ப்புக்கள் மிக மோசமானவை. பந்து காலில் பட்டாலே போதும் உடனேயே சுட்டுவிரலை உயர்த்தி விடுவார். இவரால் அதிகம் பாதிக்கப்பட்டது இந்திய அணிதான். எல்லை மீறிய ஒருகட்டத்தில் தான் இந்தியா பங்கு கொள்ளும் போட்டிகளில் இவர் நடுவராக கடமை புரியக் கூடாது என்றொரு கோரிக்கையை இந்திய கிரிக்கெட் சபை ICCக்கு விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்போது தெரிவு செய்யப்பட்ட சர்வதேச பிரிவு நடுவர்களில் அசோக டீசில்வாவும், ரஸல் ரிபினும் மீளவும் இணைக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் இவர்களது தீர்ப்புக்களில் ஏற்பட்ட திருப்தியின்மை காரணமாகவே இவர்களைத் தகுதி நீக்கம் செய்த ICC - இப்போது மட்டும் எந்த அடிப்படையில் மீளவும் இணைத்துள்ளது? தடைசெய்யப்பட்ட காலத்தில் தவறுகளை இவர்கள் திருத்திக் கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இடமளிக்கப்பட்டிருக்கிறதா? அல்லது பலிக்கடாவாவது வீரர்கள் தானே என்ற அசண்டையீனத்தின் பிரதிபலிப்பாய் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறதா? இந்தக் கனதியான கேள்வியின் அர்த்த புஷ்டியான விளக்கம் ICCக்கு மட்டுமே வெளிச்சம்.

முன்னர் ELITE PANAL பிரிவில் கடமைபுரிந்த மேற் கூறிய இருவரும் இரண்டாம் தரமான சர்வதேச பிரிவு நடுவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை அவர்களின் தகுதிப்படிநிலையிறக்கத்தையே வெளிப்படுத்தி நிற்கிறதென்றால் அது மிகையில்லை. எது எப்படியோ அவ்வப்போது தலையெடுக்கும் நடுவர்களின் தவறான தீர்ப்புக்கள் தொடர்பான சர்ச்சைகளை மேலும் ஊக்குவிக்கும் செயற்பாடாகவே இதனையும் நோக்கவேண்டியிருக்கிறது.

-விமலன்

## நம்ம ஊரு நாயகன்



டொன். பிரட்மன்
காவிய நாயகன்

*அவுஸ்ரேலிய கிரிக்கெட் வரலாற்றிலே மிகவும் செல்வாக்குப் பெற்ற நபர்களாக இரண்டு பேரை அவுஸ்ரேலிய கிரிக்கெட்சபை தெரிவு செய்துள்ளது. தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் கிரிக்கெட் அவுஸ்ரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மன் மற்றும் பத்திரிகைத்துறை விற்பன்னர் கெரி பெக்கர் இருவரையுமே அவுஸ்ரேலிய கிரிக் கெட் பொறுத்து முக்கிய நபர்களாக அறிவித்துள்ளது.*

*இவர்களுள் டொன் பிரட்மன் கிரிக்கெட் வீரராகவும் கெரி பெக்கர் கிரிக்கெட் ஆட்டங்களுக்கு புதுமெருகு ஊட்டுபவராகவும் இணங்காணப்பட்டுள்ளனர். கிரிக் கெட் அவுஸ்ரேலியாவின் தலைவர் பொப் மெரிமென் கருத்துக் கூறுகையில் -கெரி பெக்கர் இன்னும் கிரிக்கெட் மீது தணியாத தாகம் கொண்டவராக இருக்கிறார். கிரிக் கெட் தொடர்பில் பல மாற்றங்களைப் புகுத்த வேண்டும். புதிய புதிய கவர்ச்சிகரமான விடயங்களை உள்வாங்க வேண்டும் என்று கருதுகிறார் எனக் கூறியுள்ளார்.*

*அவுஸ்ரேலிய வீரர்களைப் பொறுத்த வரை எழுபதுகளின் பிற்பகுதியில் கூட அவர்கள் தொழில்சார் வீரர்கள் என்று கருதப்பட்டாலும், அவர்களது வருமானம் என்னவோ மிகக் குறைவுதான். பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் கிரிக்கெட் வீரர்கள், பொருளாதார நிலை பொறுத்து மன மகிழ்ச்சியாக இல்லை ஆதங்கமே. 1977இல் தொலைக்காட்சி நிறுவன ஜாம்பவான் கெரி பெக்கரின் மந்திர மாயிற்று. இதனால் உருவானதே WSC என்றழைக்கப்பட்ட கெரிபெக்கர் கிரிக்கெட். அன்றிருந்த ஒரு நாள் போட்டி அமைப்பு முறையையும், வீரர்களின் பொருளாதார ஆதங்கத்தையும் சரியாகப் பயன்படுத்திய கெரிபெக்கர் புதுமை புரிந்தார்.*

*இதனை பாரம்பரிய கிரிக்கெட் வாதிகள் கிரிக் கெட் அழிந்தது என்று கூக்குரலிடத் தொடங்கினர். பல கண்டனங்களை எழுப்பினர். ஆனால் அவர் தயங்கவில்லை. பகல் இரவு ஆட்டங்கள், விதம்விதமான நிற உடுப்புகள் , வெள்ளைப் பந்து, கறுப்பு நிற SIGHT SCREEN என்றெல்லாம் இன்று கிரிக்கெட் ரசிகர்கள் காணும் அம்சங்களை எல்லாம் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் கெரி பெக்கர் தான்.*



கெரி பெக்கர்
நவீனத்துவம் இவர் கையில்

*அதாவது பழமைவாதிகள் "பாவமான" காரியங்கள் என்று எவற்றை அன்று விமர்சித்தார்களோ, அவையே இன்று "புனிதமான" செயற்பாடுகளாகி விட்டன. இன்று நூற்றாண்டு விழா காணும் கிரிக் கெட் அவுஸ்ரேலியா கெரி பெக்கரை புதுயுக நாயகனாக ஏற்றுக் கொண்டுள்ளமையும் புதுமைதான்.*

– மக்டலின்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



# யாருக்கு யார் சொந்தம்?

இலங்கையில் மிகப் பிரபல்யமானது கிரிக்கெட். தற்போது விளையாட்டுத் துறையில் பரபரப்பாகப் பேசப்படுவதும் கிரிக்கெட் பற்றித்தான். ஆனால் அது விளையாட்டைப் பற்றியல்ல. விளையாட்டுத்துறை நிர்வாகத்தைப் பற்றித் தான். திலங்க சுமதிபால தலைமையில் இலங்கைக் கிரிக்கெட் சபை நிர்வாகம் அமைந்ததும், சில நாட்களிலேயே விளையாட்டுத்துறை அமைச்சரால் அந்தச் சபை கலைக்கப்பட்டு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டதும், இந்தக் காலப் பகுதியில் இலங்கை அணி நியூசிலாந்தில் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டிருந்ததும், அவர்கள் இலங்கை வந்ததும் எந்தத் திசையில் பார்ப்பது என்று தெரியாமல் தவித்ததும், இதன் பின்னதான நிகழ்ச்சியில் SLC தலைமையகம் சிவில் அணிந்த பொலிஸாரின் உதவியுடன் திறக்கப்பட்டு இடைக்கால நிர்வாகக் கட்டடத்தைக் கையகப் படுத்தியதும் என்று கதை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இது தொடர்பில் இன்னுமின்னும் கருத்துக்கள் வந்து கொண்டே இருக்கின்றன.


அரவிந்த நீயும் நானுமா?

இதற்கிடையில் தலைமைத் தெரிவாளர் அஸந்த டி மெல் நீக்கம், இது தொடர்பாக அவரது மனக் குமுறலால் வெளிப்படும் உள்வீட்டு விடயங்கள், இடைக்கால நிர்வாகசபையில் உள்ள சில அங்கத்தவரின் ஏற்ற இறங்கங்கள் பற்றிய பிரேத பரிசோதனைகள் என்று போய் இறுதியாக நல்ல இரண்டு நண்பர்களுக்கு இடையே விரிசல் ஏற்பட்டு விடுமோ என்ற நிலையில் ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது.

டுபாயில் நடைபெறும் ICC உயர் மட்ட மாநாட்டுக்கு முன்னாள் கிரிக்கெட் சபையின் உபதலைவர் அரவிந்த டி சில்வா கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால் அவரது பெயர் நீக்கப்பட்டு தற்போது அர்ஜுன ரணதுங்கவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் இலங்கையின் கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு வரையறைக்கு அப்பாற்பட்டது. இப்போது கிரிக்கெட் நலன் சார்ந்த ரீதியில் அர்ஜுன டுபாய் பயணத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். இது அரவிந்தவின் நோக்கில் எப்படி இருக்கும் என்று ஊகிக்க முடியவில்லை. ஆனாலும் இந்தச் சம்பவம் பற்றிக் கருத்துக்கூறும் அரவிந்த இந்தச் செயற்பாடு இடைக்கால நிர்வாக சபையின் ஒரு சூழ்ச்சி என்று குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அர்ஜுனவோ கிரிக்கெட் உயர்மட்ட நிர்வாகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்த எண்ணுவதாகவும் தெரியவில்லை. அவர் கனிஷ்ட மட்ட கிரிக்கெட் வளர்ச்சி பற்றியே பேசுகிறார். இன்றைய இலங்கை அணியில் உள்ள பிரபல்ய வீரர்கள் பலரின் பெயரைக் குறிப்பிடும் அவர், இவர்களின் ஓய்வை யடுத்து இந்த வெற்றிடங்களை நிரப்ப யார் இருக்கிறார்கள் என்று வினாவுகிறார். எனவே கனிஷ்ட மட்டத்தில் சரியான திட்டமிடலை ஏற்படுத்த வேண்டும். என்னை பொறுத்த வரை அந்த மட்டத்திற்கான செயற்பாட்டிலேயே என்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புவேன் என்று கூறியுள்ளார்.


ரணதுங்க கண்ணா நீயும் நானுமா?

இலங்கைகிரிக்கெட்டைப் பொறுத்து இது ஒரு வசந்தகாலமல்ல என்று எண்ணத் தோன்றுகிறது. புலனாகாத பல காரணிகளின் பகைப் புலத்தில் தான் இந்த விடயங்களை நோக்க வேண்டும் போலத் தெரிகின்றது. அதோடு அரசியலின் தாக்கம் இலங்கைக் கிரிக்கெட் விடயங்களில் இருப்பதும் புலனாகிறது. அரசியல், கிரிக்கெட் இரண்டும் ஆரோக்கியமாக இணைந்தால் அது வளர்ச்சிப் பாதை. அதற்கப்பால் ஏட்டிக்குப் போட்டி என்றால், அது பாரிய நோயின் அறிகுறி. இன்னொருபுறம் இந்தக் குழப்ப நிலையில் இடைக்கால நிர்வாக சபை 2007 உலகக்கிண்ணத்தை வெல்வோம் என்று உறுதி பூண்டிருப்பது பலரால் வேடிக்கையாகவே பார்க்கப்படுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை என்ற கூற்று உண்டு. ஆனால் விளையாட்டில் அப்படியல்ல. நிரந்தர நண்பர்களுக்கு அப்பால் எதுவுமே இல்லை என்பது தான் விளையாட்டின் தாற்பரியம். அரவிந்த, அர்ஜுன இருவருமே எதனை விட்டுக் கொடுத்தாலும், எதனைப் பெற்றுக் கொண்டாலும் அவர்களது நட்பை இழந்துவிடக் கூடாது என்பது தான் ரசிகர்களின் விருப்பம்.

– ஜோசப் கிருஷ்ணா.

# சவாலல்ல சலனம்


ஸ்ரோஸ் மாற்றியமைப்போம்

இங்கிலாந்து – அவுஸ்ரேலிய ASHES தொடர் ஜூலை மாதம் இங்கிலாந்தில் தொடங்கவுள்ளன. அதற்கு முன்னதாக நடைபெறும் எந்த விடயங்களும் எதிர்வரும் ASHES தொடருடன் தொடர்புபடுத்தியே பார்க்கப்படும். ஒவ்வொரு சாதக பாதக நிலையும் கணிக்கப்படும்.

இந்த ரீதியில் தான் இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல் வோண் சிந்திக்கிறார். இந்த வருட இறுதியில் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய எதிர் ICC உலக XI சுப்பர்சீரிஸ் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான முதல் கட்ட முப்பது பேர் தெரிவில் இங்கிலாந்து வீரர்கள் ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடையும் வோண், இதன்மூலம் ஆஷஸ் தொடருக்குச் சமதையான வீரர்கள் தம்மவர்கள் என்று கணிப்பீடு செய்துவிட்டார்.

சிட்னியில் நடைபெறும் சுப்பர் டெஸ்டுக்காக அன்ட்ரூ பிளின்ரொப், ஸ்ரீவ் ஹேர்மிஷன், அன்ட்ரூ ஸ்ரோஸ், மைக்கல் வோண் ஆகியோர் தெரிவு செய்யப்பட பிளின்ரொப், டெரன்கோ, கெவின் பீட்டர்ஸன், மார்க்கஸ் ட்ரெஸ் கொதிக் ஆகியோர் ICC WORLD XI ஒருநாள் அணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த முப்பது பேரில் அடங்கும் ஏழு பேரில் எத்தனை பேர் இறுதிக் கட்டத்தில் தெரிவாவார்கள் என்று தெரியாவிட்டாலும், இதுவே இங்கிலாந்தைப் பொறுத்து ஒரு பூஸ்ட் ஆக இருக்கும் போலத்தெரிகிறது.

மறுபுறம் இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும், மிடிலெஸெக்ஸ் வீரருமான அன்ட்ரூ ஸ்ரோசின் விக்கெட்டை கவுண்ரி ஆட்டத்தில் இலகுவாக வீழ்த்தியதில் ஷேன்வோண் படு திருப்தியாக இருக்கிறார். ஸ்ரோஸுக்கு நான் பந்து வீசியது இதுவே முதல் தடவை. அவரை நான் பரிசோதிக்கவே விரும்பினேன். அவர் எனது பந்து வீச்சுக்கு REVERSE SHOT அடிக்க முனைந்த போது, அவரது நிலையை நான் கணித்து விட்டேன். நேரடியாக ஸ்ரோஸின் இலக்கைச் சாய்த்து விட்டார். எதிர்வரும் நாட்களில் ஏனைய இங்கிலாந்து வீரர்களையும் ஷேன் வோண் கவனிக்கத் தயாராகி வருவது ASHES சுற்றுப் போட்டியுடன் தொடர்புபடுத்தியேயாகும்.

மேலும் ஜூலையில் ஆரம்பிக்கும் ASHES தொடர் செப்ரெம்பர் வரை தொடரும். இக்காலப் பகுதியில் DRY PITCHES காணப்படும் ஆகையால், சுழற்பந்து வீச்சாளருக்கு வாய்ப்பாக இருக்கும். இதனை 1956 இல் நடைபெற்ற 5 டெஸ்ட் தொடரில் இங்கிலாந்தின் ஜிம் லேக்கர் 46 இலக்குகள் வீழ்த்தியிருந்தார். இந்தமுறை ஷேன் வோண் அதனை முறியடிப்பாரா என்று ஒரு கேள்வி எழுகின்றது. எனவே ASHES தொடரை முன்னிறுத்தி எல்லா நிகழ்வும் இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இனி சொற்போர்கள், உளவியல் யுத்தம், ஊடகத்துறை யுத்தம் என்று அவுஸ்ரேலிய– இங்கிலாந்து கிரிக்கெட் சார்ந்த அணிகளுக்கு ஒரே பரபரப்புத்தான். – செந்தூரன்


ஷேன் வோண் ஒருக்காலும் முடியாது

# தகுதிக்குப் பரிசு


சங்ககாரா தகுதிக்குறைவேதுமில்லை

ஒக்ரோபர் மாதத்தில் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள ICC SUPER SERIES கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளவெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள முப்பது பேரில் இலங்கை அணிவீரர் குமார் சங்ககாரவும் ஒருவர். இவர் தென்னாபிரிக்காவின் மார்க் பௌச்சர் மற்றும் நியூசிலாந்தின் பிரென்டன் மக்கெலம் இரு வரையும் மேவி இவர் சிறந்த விக்கெட் காப்பாளராக உள்வாங்கப்பட்டுள்ளார் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

எதிர்வரும் இந்தத் தொடர் பற்றிய கருத்துக்கள் சிலவற்றை சாங்ககார கூறியுள்ளார். அவுஸ்ரேலிய அணி தோற்கடிக்கப்பட முடியாததொரு அணியல்ல என்பது அவரது கருத்து. அண்மைக் காலத்தில் அவுஸ்ரேலிய அணி சில அழுத்தங்களை ஆட்டங்களின்போது எதிர்நோக்கியுள்ளது. எனவே பூரணத்துவமான எதிர்ப்பொன்றைக் காட்டுவதன் மூலம் அவுஸ்ரேலியாவைத் தோற்கடிக்க முடியும் என்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

உலகில் அதிசிறந்த வீரர்கள் ஒன்றிணையும் உலக அணியில் அத்தனை பேருடைய புரிந்துணர்வும், ஒருங்கிணைவும் மிகமுக்கியமானதாகும். சில வேளைகளில் ஆட்டங்கள் நடைபெற ஓரிரண்டு நாட்களுக்கு முன்னமே எல்லோரும் ஒன்றிணையக் கூடும். ஆனால் தத்தமது நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் போது அவர்களால் வெளிப்படுத்தும் பூரணத்துவத்தை இந்தப் போட்டிகளில் வெளிப்படுத்துவார்களா என்பதும் ஒரு கேள்விக்குரிய விடயம் தான் என்கிறார். ஆனால் இவை உத்தியோக பூர்வமான ஆட்டங்களாக ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதால், போட்டியில் ஒரு கடுமைத்தன்மை இருக்கும் என்று இவர் நம்புகின்றார்.


மத்தியூ ஹைடன் எங்களுக்குச் சவாலா?

குமார் சங்ககார அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான கிரிக்கெட் போட்டிகளில் குறிப்பிடத்தக்க அளவு திறமையைக் காட்டியவர். ஒரு நாள் போட்டிகள் என்று எடுத்துக் கொண்டால் பொதுவான சராசரி 33.37 ஆக இருக்க, அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சராசரி 50 ஆக இருக்கிறது. இதேவேளை டெஸ்ட் ஆட்டங்கயையும் பொறுத்து பொதுவான சராசரி 48.13 ஆக இருக்க அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சராசரி 30 ஆக இருக்கிறது. சங்ககார இலங்கை வீரர்களுள் இளமையும், திறமையும் நிறைந்த வீரர்களுள் முதன்மையாகக் கருதப்படுபவர். இவரது திறமைக்குக் கிடைத்த பரிசே அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான உலக அணியில் பெற்றுக்கொண்ட இடமாகும்.

– அன்ரனி.



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

# போதியளவு நிதி வழங்காததாலேயே வீதி புனரமைப்புப் பணிகள் தாமதம்

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

விசுவமடுச் சந்தியிலிருந்து சுண்டிக்குளம் நோக்கிச் செல்லும் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதற்குப் போதியளவு நிதி வழங்கப்படாமையே காரணம் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதியின் விசுவமடுச் சந்தைச் சந்தியிலிருந்து சுண்டிக்குளம் செல்லும் வீதி - புனரமைக்கப்படாமல் உள்ளது. இந்த வீதியை விரைவில் புனரமைப்பதாக முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரியிடம் கேட்டபோதே, இந்த வீதி புனரமைக்கப்படாமைக்கான காரணம் நிதிப் பிரச்சினை என தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவத்துக்குப் பக்தர்கள் சென்றுவர வசதியாக இந்த வீதியைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டது. இதற்கான கலந்துரையாடல் புளியம்பொக்கணை ஆலய முன்றலில், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில் இந்த வீதியை - ஆலய உற்சவத்துக்கு முன்னர் புனரமைப்பதாக ஒப்புக்கொண்டு வாக்குறுதி வழங்கியிருந்தோம்.

ஆனால் இதற்கான நிதியை அரச அதிபர் ஒதுக்கித்தரவேண்டும். இதற்கான நிதி எமக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. இதனாலேயே வீதி புனரமைப்பு மேற்கொள்ளப்படவில்லை.

அரச அதிபர் வீதிக்கான புனரமைப்பு நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கும்போது, தாமதமின்றிப் பணியை ஆரம்பிக்கமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆழியவளை திலீபன் மருத்துவமனை மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவுதினம் - கடந்த திங்கட்கிழமை மருத்துவமனை வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கிராம அலுவலர் வ.தவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கண்ணதாசன் ஏற்றினார்.

ஈகச்சுடரை கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைக்கொடி ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றினார்.

சிறப்புரைகளை அதிபர் ச.திரவியராசா, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.எஸ்.தியாகராசா, உதவி அரச அதிபர் ஆர்.ஜெயசீலன், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் நிலவன், திலீபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் சரித்திரநாயகன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த வைத்திய நிலையத்தில் சேவைபுரியும் வைத்தியர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. (122)

### மருதங்கேணி கல்விக் கோட்டத்தில்

# ஒன்பது பாடசாலைகளுக்கு சூரிய மின்கலம் வழங்கல்

மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் மாலை நேர வகுப்புக்களுக்கு வசதி செய்யும் வகையில், அந்தப் பிரதேத்தில் உள்ள எட்டுப் பாடசாலைகளுக்கு சூரிய மின் கலங்கள் வழங்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தின் அமெரிக்க கிளையின் நிதியுதவியுடன் தமிழீழ மாணவர் அமைப்பால் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன், வடமராட்சி கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன் ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் ஏற்றி வைத்தார். சிறப்புரைகளை பொருண்மிய மதியுரையகத்தைச் சேர்ந்த தாஸ், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், அதிபர் திரவியராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இ.த.க. பாடசாலை, தாளையடி றோ.க.த.க பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன. (122)

# மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு வலைப்பந்தாட்டப் போட்டிகள்!



தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு - தமிழீழ மாணவர் அமைப்பும், கிளிநொச்சி கல்விப் பணிமனையும் இணைந்து நடத்தும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள், கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கிளிநொச்சி பளை றோ.க மகா வித்தியாலயமும், 17 வயதுப் பிரிவில் - முதலாமிடத்தை அக்கராயன் மகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும், 19 வயதுப் பிரிவில்- முதலாமிடத்தை வட்டக்கச்சி மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை, கிளிநொச்சி இந்துக் கல்லூரியும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரக் கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள இடைத் தங்கல் முகாம்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தாரின் சுகாதாரப் பிரிவு வள ஆளணியினரால் மலசலகூடத்தைப் பயன்படுத்துதல், வயிற்றோட்ட நோய் பரவாது தடுத்தல் போன்ற பல விடயங்கள் குறித்து பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதிக்கப்பட்டு வருகிறது. (122)

# தமிழீழ வைப்பகத்தின் சிறப்புப் பரிசில்கள்!

தமிழீழ வைப்பகம் - நாளை தனது 12 ஆவது ஆண்டில் காலடி வைக்கவுள்ளது.

எனவே நாளை 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பிள்ளைகள் தேட்டக்கணக்கு, சிறார் உண்டியல், அமுதம் தேட்டக் கணக்கு என்பவற்றுக்கு 5 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுவோருக்கு சிறப்புப்பரிசாக பாடசாலைப் பையும், 10 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடுபவர்களுக்கு சிறப்பு பரிசாக குடை ஒன்றும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வறிய மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பிரதேசத்தில் தமது கல்வியைத் தொடரமுடியாது, வறுமைக்கோட்டின்கீழுள்ள மாணவர்களுக்கு அவர்களது கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் மாதாந்தம் தலா ஆயிரம் ரூபா வீதம் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் பயிலும் - வைகுந்தவாசன் விஜிதரன் க.பொ.த (சா/தரம்), இராமசாமி ஜீவசிறி க.பொ.த (சா/தரம்), பத்மநாதன் விஜிதா க.பொ.த (உ/தரம்), சதாசிவம்பிள்ளை சசிகலா க.பொ.த (உ/தரம்) ஆகிய 4 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

புலம்பெயர்ந்துவாழும் உறவுகளின் நிதியுதவியின் மூலமே இந்தத் திட்டத்தை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக கனடாவில் வாழும் ஜூடிஞானேந்திரனின் நிதியுதவியின்கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவர்களுக்கும் பாடசாலைக் கல்வியை முடிக்கும் வரையிலான காலப்பகுதிக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும்.

இந்தத் திட்டமானது - கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில், மூன்று மாதத்துக்கான கொடுப்பனவாக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் இந்த மாணவர்களுக்கு நிறுவனத்தின் தலைவர் க.செல்வநாயகத்தால் வழங்கப்பட்டது.

மேலும் அவர் இந்தத் திட்டத்துக்குப் புலம்பெயர் நாட்டில் வாழும் தேச உறவுகளின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில், இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, மாணவர்களின் கல்விநிலையை மேலும் மேம்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே - 22

1858 : கனடிகட்டில் ஜி.போர்டன் என்பவர் அதிக நாட்கள் வைத்திருந்து பயன்படுத்தக்கூடிய பதப்படுத்தப்பட்ட பாலை முதன்முதலாக விற்பனைக்கு விட்டார்.

1901 : அவுஸ்ரேலிய நாடாளுமன்றம் மெல்போர்னில் முதன் முதலாகக் கூடியது.

1902 : வட்டிக் கொடுப்பனவு பற்றி நீண்ட நாட்களாக இருந்துவந்த பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காக அமெரிக்காவும், மெக்ஸிக்கோவும் ஒரு உடன்படிக்கையில் கையெழுத் திட்டன. இந்த உடன்படிக்கைப்படி - ஹேக்கிலுள்ள ''நடுவர் நீதிமன் றத்தின்'' தீர்ப்புக்குக் கொண்டு சென்றன.

1906 : 1858 ஆம் ஆண்டுமுதல், பிரிட்டிஷ் தனது பிடியில் வைத்திருந்த, கனடாவின் பசுபிக் கடற்கரையில் அமைந்திருந்த எஸ்க்யூமால்ட் படைத்தளத்தில் இருந்து பிரிட்டிஷ் படையின் கடைசிப் பிரிவு வெளியேறியது.

1918 : நேச நாடுகளது பெற்றோலிய மாநாடு கூடியது.

1930 : சிரியாவினது அரசியல் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

1933 : ஏழு நாட்கள், 18 மணித்தியாலங்கள், 49 நிமிடங்கள் செலவிட்டு "வைலி போஸ்ட்" என்பவர் முதன் முதல் தனியாக விமானத்தில் உலகைச் சுற்றிவந்தார்.

1939 : அரசியல், இராணுவம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமக்கிடையே ஒத்துழைப்பது பற்றிய "ஸ்டீவ் ஒப்பந்தம்" என்ற ஒப்பந்தத்தில் இத்தாலியும், ஜேர்மனியும் ஒப்பமிட்டன.

1940 : பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு எல்லையற்ற அரசியல் அதிகாரங்களை அளிப்பதற்கான "நெருக்கடிநிலை அதிகாரங்கள் சட்டத்தை" பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

1941 : கிறீஸ் மன்னர் நாட்டைவிட்டு எகிப்துக்குத் தப்பிச் சென்றார்.

1943 : ஜேர்மனிய எதிர்ப்பாளர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்த பிரிட்டிஷ் அதிகாரிகள் யூகோஸ்லாவியாவில் பரசூட் மூலம் இறக்கப்பட்டனர்.

1947 : துருக்கிக்கும், கிறீஸுக்கும் அமெரிக்க உதவியளிப்பதற்கு அமெரிக்க காங்கிரஸ் அங்கீகாரம் வழங்கியது.

1950 : இலங்கையின் தமிழர் தாயகப் பகுதிகளில் முதலாவது சிங்களக் குடியேற்றம் கல்லோயா குடியேற்றத்திட்டம் என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1958 : இலங்கைத் தீவில் திட்டமிட்ட தமிழினப் படுகொலைகளின் ஆரம்பநாளாக அமைந்தது. அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க மௌனமாக அங்கீகரிக்க, நூற்றுக்கணக்கான தமிழர்கள் உயிரோடு எரிக்கப்பட்டனர், வெட்டிக் கொல்லப்பட்டனர். கொதிக்கும் தார்ப் பரலில் தூக்கிப் போடப்பட்டனர்.

1960 : துருக்கியில் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

1963 : ஐக்கிய நாட்டுச் சபையின் செலவில் தனது பங்கைச் செலுத்த ரஷ்யா மறுத்துவிட்டது.

1972 : பிரிட்டிஷ் அரசின் டொமினியன் அந்தஸ்துடன் இருந்துவந்த இலங்கை சுதந்திரக் குடியரசானது - முதலாவது குடியரசு யாப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த யாப்பின்படி சிறிலங்கா என்ற பெயரும் நடைமுறைக்கு வந்தது. இதுவரை காலமும் ஆள்பரியாக இருந்த வில்லியம் கோபல்லாவ முதலாவது ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

◆ : முதற் தடவையாக அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ரஷ்யாவுக்கு வருகை தந்தார். ரஷ்யத் தலைவர்களுடன் உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்தி வந்த ஜனாதிபதி நிக்ஷன் ஆகும்.

1973 : ரஷ்யாவால் இந்த மாதம் 11 ஆம் திகதி ஏவப்பட்ட காஸ்மாஸ் - 557 என்ற விண்கலம் திரும்பிவரும் வழியில் வெடித்துச் சிதறியது.

1989 : இந்தியாவின் நீண்டதூர ஏவுகணையான "அக்கினி" ஏவுகணை ஒரிஸாவிலுள்ள சாந்திப்பூரில் இருந்து வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

1990 : வடக்கு ஏமானும், தெற்கு ஏமானும் அதிகாரபூர்வமாக இணைந்து, ஐக்கிய ஏமான் குடியரசு உதயமானது.

1994 : ஐக்கிய ஏமானில் இருந்து பிரிந்து தனிநாடானதாக தெற்கு ஏமான் தலைவர்கள் அறிவித்தனர்.

✪ கயானா நாட்டுத் தேசியதினமாகும்.

✪ இலங்கையின் குடியரசு தினம்.

தொகுப்பு சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு.
திருக்குறள்

## நமது நோக்கு

### புத்தர் சிலையும், நாட்டின் நிலையும்!

அரசியலே - அரசுரிமையே வேண்டாமென்று, அரச வாழ்வையே முற்றாகத் துறந்து, அரச மரத்தடியில் அமர்ந்து ஞானம்பெற்ற கௌதம புத்தர் - பரிநிர்வாணம் அடைந்த புனித வைகாசி விசாகப் பௌர்ணமி தினம் அடுத்துவரும் நாட்களில் இலங்கையில் பௌத்த - சிங்கள மக்களால் கொண்டாடப்படவுள்ள சூழ்நிலையில் திருமலையில் பெரும் பதற்றத்தையும், குழப்பத்தையும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடக்கூடிய ஆபத்தையும் ஒரு புத்தர்சிலை உருவாக்கிவரும் அபாயச்சூழல் ஏற்பட்டிருப்பது துயரம்தரும் விடயமாகும்.

'புத்தம் சரணம் கச்சாமி' என்று உரக்கக் கோஷமிட்டபடி புத்தத்தைச் சரணடைவதாகக் கூறிக்கொள்ளும் புத்த பிக்குகளும், பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் ஒன்றாக இணைந்துகொண்டு, புத்தத்தைச் சந்திச் சண்டைக்குரிய விவகாரமாக்கி - இப்போது அதனை மற்றொரு இன வன்முறைக்கான 'தூண்டல் முயற்சி'யாக்க வருவதுதான் அசிங்கமானதாகும்.

ஆன்மீகத்தின் குறியீடாக புத்தர்சிலைகள் நிர்மாணிக்கப்பட்டால் அதனை எவரும் ஆட்சேபிக்கப்போவதில்லை. ஆனால், பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தின் சின்னமாக - தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறையின் அடையாளமாக - அதனை நிர்மாணித்து அச்சுறுத்தல் விடுக்க முனைவதுதான் ஆத்திரமூட்டும் விடயமாகும்.

கடந்த சில நாட்களாக திருமலையை ஆக்கிரமித்து நிற்கும் பதற்றமும், பீதியும் நிறைந்த சூழலுக்கு முழுப் பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்.

திருமலை நகரின் மையத்தில் பேருந்து நிலையப் பகுதியில் இரவோடு இரவாக அமைக்கப்பட்ட சுமார் ஐந்தடி உயரமான புத்தர்சிலையும், அதனைச் சுற்றி அமைக்கமுயன்ற பாதுகாப்பு வேலியும் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டவையே ஆகும். வேண்டுமென்றே இனக்கொந்தளிப்பு சூழலொன்றை ஏற்படுத்தி எரிகிற வீட்டில் பிடுங்கி லாபம் காணும் அரசியல் உள்நோக்கத்துடன் செயற்பட்டுவரும் கலகக்கும்பல்களே இதன் பின்னணியில் செயற்படுகின்றன. இந்தக் கும்பல்களுக்கு ஆயுதப் படையினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கி வருவது இத்தகைய அடாவடித்தனங்களுக்கு அரச தரப்பின் அங்கீகாரம் இருப்பதையே உணர்த்திநிற்கிறது.

சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்றுமாறு நீதிமன்றில் உத்தரவு வழங்கியும், அதனை அமுல்படுத்த மறுப்போரை கைதுசெய்யவோ, தண்டிக்கவோ திராணியற்ற நிலையில் இருக்கும் அரசு - இன்று திருமலை வன்முறைகளமாக மாறும் சூழலைத் தடுக்கமுடியாது நிற்பதற்கு இன்னொரு காரணம், அவர்களும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பாதுகாவலர்களாக இருப்பதேயாகும்.

வெளியே சமாதானத்தைக் குழப்ப விரும்பும் சக்திகள்தான் திருமலையில் புத்தர்சிலையை நிர்மாணித்து நெருக்கடியான சூழலை உருவாக்கியுள்ளன என்று கூறும் அரசுக்கு அந்த சக்திகள் எவை என்பது தெரியாத விடயமேயல்ல...

அப்படித் தெரிந்தும் அதனைத் தடுத்துநிறுத்த அவர்களால் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியவில்லை என்றால் அதற்கு என்னதான் அர்த்தமாம்?

அவர்கள் அதனைத் தடுக்க விரும்பவில்லை என்றுதானே அர்த்தம்.

இங்கு இதனையொட்டி எழும் வன்முறைகளால் பாதிக்கப்படப்போவது பெரும்பாலும் தமிழ் மக்களே என்பது வெளிப்படையான ஒன்றேயாகும்.

திருமலையில் தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுவரும் சிங்களக் கடையர்களுக்கு படைத்தரப்பினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கிவருவதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கத்தி, வாள், கடப்பாரை சகிதம் உலாவரும் சிங்கள காடையர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் படையினர் அப்பாவி மக்களைத் தாக்கியும் அச்சுறுத்தியும் வருவதால், திருமலைப் பதற்றம் ஒரு தொடர் நிகழ்வாக இருக்கப் போகிறதோ என்ற அச்சம் மக்களிடையே கிலியை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

நீதிமன்ற உத்தரவை அமுல்செய்வதில் அசட்டையாக இருக்கும் அரசு, பாதிக்கப்படுவோர் விடயத்தில் நீதியாக இருக்கப்போவதே கிடையாது.

இதேநிலை தொடருமேயானால் அங்குள்ள தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு என்பது கேள்விக்குறியான விடயமாகிவிடும்.

ஹர்த்தால் போன்ற அமைதிவழிப்போராட்டங்கள் மூலம் இத்தகைய பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வை சிங்கள அரசுகள் முன்வைத்ததாக வரலாறே கிடையாது. யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என நினைக்கும் சிங்களப் பேரினவாதிகள் - போரை மீண்டும் ஆரம்பிக்கும் வழிமுறைகளையே தேர்வுசெய்ய முனைவது திருமலைச் சம்பவங்களின் மூலம் தெளிவாகின்றது.

அவர்களின் முடிவு அதுவேயானால் மற்றொரு போருக்கு புத்தரையே மையப்பொருளாக்க, பௌத்த சிங்கள பேரினவாத வெளியர்கள் தீர்மானித்துவிட்டதாகவே கூறவேண்டும்.

இவர்களை புத்தரே மன்னிக்க மாட்டார்.

## நாடும் நடப்பும்



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சமாதானமும் சமத்துவமும் போதித்த புத்தர் சிலையாகி நின்று அமைதி குலைந்தது!

சமத்துவமும் சமாதானமும் சகிப்புத் தன்மையும் உலகில் நிலவவேண்டுமெனப் போதித்த புத்தபகவான் உருவச்சிலையை இரவோடிரவாக சந்தியில் வைத்து திருகோணமலையில் இன்று அமைதி குலைந்திருக்கிறது. இனி என்ன நடக்கும்? என்று கேட்டுக்கொண்டே வந்தார் நண்பர் பரமசிவம்.

இனி என்ன நடக்கும். சந்திக்கு வந்த புத்தர் அந்த இடத்தைவிட்டுப் போவார் என்று தெரியவில்லை. இதை நீதிபதியும் தெரிவித்திருக்கிறார். பிரச்சினையை அமைதியாகத் தீர்ப்பதற்கு பலரும் பல வழிகளிலும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றேன்.

இதுவரை அரசமரம் இருந்த இடங்களில்தான் திடீர் புத்தர் சிலைகள் முளைத்திருக்கின்றன. திருகோணமலையில் கொட்டகைக்குக் கீழேயல்லவா தோன்றியிருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த படங்களிலிருந்து தெரிகிறது என்றார் பரமசிவம். பன்னிரண்டு அடி புத்தர் சிலை திடீர் என்று தோன்றுமாக இருந்தால், இருபது அடி அரசமரம் முளைக்காதா என்ன என்றேன்.

சில மாதங்களுக்கு முன்னர் என்றுதான் நினைக்கிறேன். கொழும்பில் ஜா எலக்குச் சமீபத்திலோ, அந்தப் பக்கத்தில் ஒரு சந்தியில் ஒரு தேவாலயத்துக்குச் செல்லும் வீதி முகப்புக்கு அருகில் வீதி ஓரத்தில் ஒரு சொரூபம் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தார்கள். பின்னர் இது நீதிமன்றம் சென்றது. இந்தச் சொரூபத்தை சிறிது தூரம் தள்ளி வைக்கலாமென்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது. பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டது. இதற்குச் சம்பந்தப்பட்ட மக்கள் பிரச்சினையை நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதற்குச் சம்மதித்தார்கள். நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை பொறுமை காத்தார்கள். நீதி மன்றத் தீர்ப்புத் தெரிந்ததும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அந்த மக்கள் அமைதியாகப் பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்பினார்கள் என்றார் பரமசிவம்.

திருகோணமலையிலும் புத்தர்சிலை விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றது. புத்தர் சிலை முளைத்த இடம் திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமானது. அதனால் நகரசபை நீதிமன்றம் சென்றது. இதை விசாரித்த நீதிபதியும் தற்காலிகமாக புத்தர் சிலையை அந்த இடத்திலிருந்து அகற்றும்படிதான் உத்தரவிட்டிருந்தார். தற்காலிகமாக அதை அகற்றிவிட்டு பின்னர் சம்பந்தப்பட்டவர்கள் கலந்தாலோசனை செய்து ஒரு நல்ல முடிவு காணலாம் என்று நீதிபதி கருதியிருக்கலாம் என்று சொன்னேன்.

நீர் சொல்வது சரிதான். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பின்படி புத்தர் சிலையை பொலிஸார் அகற்றவேண்டும். சிலைக்குக் கிட்ட நெருங்குவதற்கே புத்த பிக்குகளும் சிங்கள பௌத்தர்களும் விட்டால்தானே. இனி வெசாக் பண்டிகை வருகிறது. இந்த புத்தர் சிலை இந்த இடத்திலேயே இனி ஞானம்பெற்று விடுவார் என்றார் பரமசிவம்.

புத்தர் சிலை விவகாரம் சம்பந்தமாக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ஏற்று நடக்க புத்தபிக்குகளும், சிங்கள பௌத்தர்களும் மறுத்து வருகிறார்கள். இதை மீறிச் செயற்படுவதற்குப் பொலிஸாரும் துணியமாட்டார்கள். அரசும் துணிந்து நடவடிக்கை எடுக்காது என்றேன்.

நீர் சொல்வதுசரிதான்; ஓர் இளம் பெண்ணைக் கெடுத்ததாக மாத்தறையைச் சேர்ந்த விகாராதிபதி ஒருவருக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்தச் சிறுமிக்கு கடந்த வாரம் குழந்தையும் பிறந்திருக்கிறதாம். இந்த பிக்குவை பத்து லட்சத்துப் பத்தாயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழ்ங்கியிருக்கிறது. இவரது கடவுச் சீட்டுப் பறிமுதல் செய்யப்பட்டதுடன் தென்பகுதிக்கு இவர் செல்லவும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது என்றுகூறிய பரமசிவம் நல்ல காலம் இந்தப் பிக்குவுக்காக வேறு பிக்குகள் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தவில்லை என்றார்.

சில தினங்களுக்கு முன் மற்றொரு பிக்குவும் பாலியல் குற்றம் சம்பந்தமாக நீதிமன்றத் தீர்ப்பைக் கேட்டு நீதிமன்ற வளாகத்திலேயே நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார் என்று நான் நினைவூட்டினேன்.

எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் அந்த மதச் சாமியார்கள் அந்த நெறியின்படி ஒழுகவேண்டும் இல்லையேல் துறவறத்தைத் துறந்துவிட வேண்டும் என்றார் பரமசிவம்.

புத்தர்சிலை விவகாரமாக இருக்கட்டும், பொதுக்கட்டமைப்பு விவகாரமாக இருக்கட்டும் எந்த முடிவெடுப்பதானாலும் விரைவாக முடிவெடுக்கப்படவேண்டும் என்றேன்.

பிரச்சினைகளை அப்படியே சிலகாலத்துக்கு விட்டுவைத்தால் அவை முட்டி மோதி வெடித்துத் தானாகவே முடிவுக்கு வரும் என்பது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் சித்தாந்தமாக இருந்தது என்று சொல்லுவார்கள். நாடு இன்று திருந்தமுடியாத அளவுக்கு சீர்குலைந்துபோயிருப்பதற்கு அவர் பின்பற்றிய இந்த நடைமுறையே காரணமாக இருந்தது. இனியும் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதோ, ஆறப்போடுவதோ நல்லதல்ல. இனியும் பிரச்சினைகளுக்குத் துணிச்சலுடன் சகல அதிகாரங்களுமுள்ள ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுக்க முன்வராவிட்டால் நாடு நாடாக இருக்காதென்பதை புத்தர்சிலை விவகாரமே சான்றாகிவிடும்! என்று சொல்லிக் கொண்டே நடந்தார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### கிரிக்கெட் மத்தியஸ்தர் போட்டிக்குப் போட்டியா?

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது கழக கிரிக்கெட் சீசன் சூடு பிடித்துள்ளது. மூன்று கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் ஒரே நேரத்தில் இடம்பெறுகின்றன.

பல்கலைக்கழக கிரிக்கெட் சுற்றுப்போட்டி, மானிப்பாய் பரிஷ் கிரிக்கெட் சுற்றுப்போட்டி, இரட்ணசிங்கம் கிரிக்கெட் சுற்றுப்போட்டி என்பன ஒரே நேரத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்தச்சுற்றுப்போட்டிகள் யாவும் யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அங்கீகாரத்துடனேயே நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு இரு சகாப்தமாக நடத்தப்பட்டு வரும் 50 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியான டொனால்ட் வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டியும் பல்வேறு இடையூறுகளினை எதிர்நோக்கி 2004ஆம் ஆண்டு சுற்றுப்போட்டி நிறைவேறாமல் இருக்கிறது.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் டொனால்ட் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு மத்தியஸ்தர்களை தருமாறு யாழ்.மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தை அணுகியபோது, தம்மிடம் மத்தியஸ்தர்களை கோராத கழகப்போட்டிகளில் பங்குபற்ற வேண்டாம் என்று யாழ்.மாவட்ட கிரிக்கெட் சபை தடுத்துள்ளதாம். இருந்தும் இத்தடையினை மீறி சில கழகங்கள் டொனால்ட் கிண்ணப்போட்டியில் கலந்துகொண்டுள்ளன. சில கழகங்கள் கலந்துகொள்ள விரும்பவில்லை. சில கழகங்கள் என்ன செய்வது என்று தடுமாறுகின்றன. இதனால் டொனால்ட் கிண்ண போட்டியும் இழுபறி நிலையில் உள்ளது.

தன்னுடைய அங்கத்தவர் எவரையும் தமது அனுமதி இன்றி வேறு சங்கங்களில் மத்தியஸ்தம் வகிக்கச் செல்ல வேண்டாம் என, யாழ்.மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனால் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துக்கு மத்தியஸ்தம் வகிக்க மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தர்கள் அஞ்சுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் சகல கிரிக்கெட் போட்டிகளுக்கும் நாற்பதுவருடகால பழமைவாய்ந்த தமது சங்கமே மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்பது யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க நிலைப்பாடு.

இந்த நிலையில் எந்தவித பரீட்சையிலும் சித்தியடையாதவர்கள் மத்தியஸ்தம் வகிக்க, போட்டிகளை நடத்த வேண்டிய நிலையில் யாழ்.மாவட்டக் கிரிக்கெட் கழகங்கள் உள்ளன.

இந்த நிலை தொடரவிடாது உடன்தீர்வு காணப்படுமா? என்பதே என்போன்ற யாழ்.மாவட்ட கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பமாகும்.

- ச.தவநேசன்

ஆர்.கே.மேனன்

# "சிறுவர் உரிமைகள்" என்றால் என்ன?... அது ஏன் காக்கப்பட வேண்டும்?

இங்கு முதலில் நாம் சிறுவர்கள் என்பது யார்? என நோக்க வேண்டும். "சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்" கூறும் வரைவிலக்கணத்தின்படி "18 வயதுக்குக் குறைந்த மனிதப் பிறவி ஒவ்வொன்றும் சிறுவர்" என நோக்கப்படுகிறது.

அண்மைக்காலங்களில் இந்த வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களிடத்தில் பல உரிமை மீறல்களை அடிப்படையான சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகிறது. இது மிக ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயம்.

ஏனெனில் இப்படிப்பட்ட சிறுவர்களது உரிமைகள் மீறப்படும் போதுதான் எதிர்பார்ப்புகள், ஆசைகள், சுதந்திரமான சிந்தனை முன்னேற்றங்கள், அரவணைப்புத் தேவைகள், ஆராய்வுத்திறன்கள் முறையடிக்கப்பட்டு ஒரு தெளிவற்ற வளர்ச்சியடையாத ஆளுமைப்பாங்கோடு சமூகத்துப் பிரஜையாகின்றனர்.

இதைவிடப் பலர் பல உளவியற்தாக்கங்களுக்கு உட்பட்டு, பாரிய பின் விளைவுகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் சிறுவருக்காக ஒதுக்கப்பட்ட உரிமைகள் பற்றிய தெளிவு நிலையொன்று எம்மவர் மத்தியில் இன்றியமையாது தேவைப்படும் ஒருவிடயமாகின்றது. அந்த வகையில் சிறுவர்களது உரிமைகள் என்பது மிக முக்கியம். இவர்களுக்குச் சிறப்பான பராமரிப்பு அவசியமென்பது 1924 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனிவாப் பிரகடனத்திலும், 1959 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஏற்றுக்கொண்ட சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் கூறப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்தச் சிறுவர்கள் சமூகத்தின் மத்தியில் வாழும்போது அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய, அவர்களுக்கே உரித்தான சில உரிமைகள் பற்றி நோக்குவோம்.

### குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் இருந்து பெறவேண்டிய உரிமைகள்

ஒரு சிறுவன் அல்லது சிறுமி தனது ஆளுமையை முழுமையாகவும், இசைவாகவும் விருத்தி செய்வதற்கு ஒரு குடும்பச் சூழலில் ஆனந்தமும், அன்பும், பற்றுணர்வும் அனைத்துக் குடும்ப அங்கத்தவர்களாலும் வழங்கப்பட வேண்டும்.

பிள்ளைக்குப் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும். இதைவிட எந்த ஊடகங்களிடத்திலோ அல்லது எந்த நபர்களிடத்திலோ இருந்து எப்படிப்பட்ட தகவல்களையும் பெற்று, தானாக இனங்கண்டு இன்னொருவருக்கு எப்படியும் வெளியிடும் உரிமையுண்டு. இந்த உரிமையில் எந்தக் குடும்ப உறுப்பினரும் தலையிடக் கூடாது. ஏனெனில் இதைத் தடுத்தாலோ அல்லது சீர் செய்தாலோ தகவல்களை உள்வாங்கும் - வெளியிடும் திறன்கள் விருத்தியடையாது மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

பின்பு நாளாக நாளாக நல்லன, தீயனவற்றை இனங்கண்டு உள்வாங்கும் - வெளியிடும் திறனைப் பெற்றுவிடும்.

ஒரு பிள்ளையின் அந்தரங்கங்களில் அதாவது -

மறைமுகமாகப் பாவிக்கும் (தனிப்பட்ட) எழுத்து மூலங்களிலோ அல்லது அமைதியாக முன்னெடுக்கப்படும் தனிப்பட்ட சிந்தனைகளிலோ அல்லது சகபாடிகள் மத்தியில் வெளியிடும் இரகசிய தகவல்களிலோ பிள்ளையின் விருப்பமின்றி அதனை அறியவோ அல்லது அதில் ஆதிக்கம் செலுத்தவோ முற்படக்கூடாது எந்தக் குடும்ப அங்கத்தவரும். ஏனெனில் பிள்ளைக்கு உரித்தான அந்தரங்கங்களைப் பெற்றோரோ அல்லது வேறுயாராவது உறுப்பினர்களோ அறிந்துவிட்டார்கள் என்ற அங்கலாய்ப்பே பிள்ளையின் மன நிலையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும்.

### சமூகத்தவர்கள் அல்லது வேறு அரசதரப்பினர் மத்தியில் சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள்

ஒரு பிள்ளையைப் பாலியல் தேவைக்கோ அல்லது பிள்ளையின் உறுப்புகளை இலாப நோக்கத்துடன் இன்னொருவர் அனுபவிக்கக் கொடுத்தலோ அல்லது வலுக்கட்டாயமாகப் பிள்ளையை வேலைக்கமர்த்தல் போன்றன நீதிக்கு முன் நிறுத்தப்படும் பட்சத்தில் - தொடர்புடைய குற்றவாளிகள், கிருமினல் அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனையை ஏற்க நேரிடும்.

இதைவிட இலங்கையில் சிறுவர் உரிமை மீறல்கள் எனப் பெரிதாக வாய்மொழிமூலம் பேசப்படும், ஊடகங்கள் மூலமும் பெரிதாக விமர்சிக்கப்படும் விடயம் என்னவெனில், சிறுவர்களைப் போருக்கு அமர்த்தல் என்ற அம்சமாகும். இதுபற்றிச் சற்று ஆழமாக நோக்கவேண்டிய தேவையுள்ளது.

கடந்த 20 தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக, அதிலும் குறிப்பாக - சிறுவர்களுக்கெதிராகப் பலவழிகளாலும் அடக்குமுறைப் போர் இடம்பெற்றுவருகிறது. இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பல சந்ததியே பலவகைப்பட்ட உரிமைகளையும், வாழ்க்கை அபிலாசைகளையும் இழந்து இன்று பல திக்குகளிலும் இடம் பெறும் இளைஞர் கோஷ்டி மோதல்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற பலவகைப்பட்ட விகாரப்பட்ட மனத்தைத் தோற்றுவித்தது இந்த அடக்குமுறைப்போரே.

இப்படிப்பட்ட பல உளவியல் ரீதியான பின்விளைவுகள் ஏற்படுத்திய சிறுவர் உரிமை மீறலோடு தொடர்புடைய விடயம் பற்றிப் பேசாத ஊடகங்களும், அரசியல்வாதிகளும் இன்று போருக்கு இளைஞர்களை அமர்த்துதல், சிறுவர் உரிமைமீறல் என வர்ணிக்ககிறது.

உண்மையிலே இதை நன்றாக ஆராய்ந்து பார்த்தால், இது ஒரு சிறுவர் உரிமைமீறல் அல்ல. அடக்குமுறைகளுக்குள்ளும், அதுமீறல்களுக்குள்ளும் வாழ்ந்து, வன்முறைக் காற்றைச் சுவாசித்த சிறுவர்கள் வாழவழிதேடி விகாரங்கள் கொண்ட மனநிலை, விம்மிய நிலையில் போருக்கு தம்மை இணைத்துக்கொள்வதை எந்த வகையிலும் சிறுவர் உரிமைமீறல் எனக் கூறமுடியாது.

இதைத் தடுத்து நிறுத்தும் போதுதான், சிறுவர்களது உணர்வு நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டு, உத்வேக மற்ற ஒரு பிரதி விம்பங்களைத் தோற்றுவித்து, சிறுவர் உரிமை மீறலுக்குள் உள்ளடக்கப்படுகிறது.

### மதமென்ற பேரிலான சிறுவர் உரிமை மீறல்கள்

பௌத்தமென்பது மிகப்பெரிய புனிதமான இந்துதத்துவப் பரப்பு. இந்தப் புனிதத்துவத்துக்கு துஸ்பிரயோகம் ஏற்படும் வகையில் இந்த மதத்துக்குள்ளும் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அவற்றைச் சற்று ஆழமாக நோக்கவேண்டும். ஆன்மீகத்தின் ஆரம்பமே தெரியாத விபரமற்ற சிறுவயதிலேயே மொட்டையாக முடிகளை அகற்றி, காவி உடை தரித்து, அனுபவிக்கவேண்டிய பல ஆதங்கங்கள் மனதிலே சுமந்திருக்க, ஆன்மீக சேவைக்கென்று அவனது அனுமதி இல்லாமல் தளளிவிடப்படுகிறதே.

இவையெல்லாம் மிகப் பெரிய சிறுவர் உரிமை மீறல்களாகும். அறிவு விருத்தியோடும், அகிலத்து அநுபவஞான வெளிப்பாட்டோடும், ஆண்டவன் உண்மைகளை உணர்ந்து, உண்மை மொழி உள்ளத்துள் உருவாக, உணர்வு ரீதியாக விரும்பிச் செல்லவேண்டிய உத்தம சேவைதான் "பௌத்த பிக்குமார்" சேவையாகும்.

ஆசைகள் என்பது மனித வாழ்வோடு மடியாது தொடர்கின்ற ஒரு விடயமாகும்.

இதை ஆன்மீக ஜீவ ஒலியால் குறைக்கலாமே தவிர, இதனை உடனடியாகத் தடுத்து அடக்கப்படும் பொழுது, இது விபரீதமாக விஸ்வரூபமெடுக்கும்.

இதற்குச் சான்றாக இடம்பெற்ற பல சம்பவங்கள் அண்மையில் நடந்தது. பிரதமரைப் புத்தபிக்கு கொல்ல முயற்சித்த சம்பவங்களும், பாலியல் நடத்தைகள், கள்ளநோட்டு அடிப்புகள் போன்றவற்றில் புத்தபிக்குகள் ஈடுபட்ட சம்பவங்கள் எல்லாம் சிறுவர் உரிமைமீறல் களை அடிப்படையாகக் கொண்ட அடக்கப்பட்ட ஆசைகள் விஸ்வரூபமெடுத்ததற்குச் சான்றாக அமைகிறது.

ஆகவே இந்தச் சிறுவர்களது உரிமைகளை மீறுதல் என்பது ஒரு சந்ததியை அடியோடு அழித்ததற்குச் சமன்.

---

ஆன்மீகம்

மோ.தார்சீசியஸ்

# பரிசுத்த தமதிருத்துவத்தின் பெருவிழா

இன்று நாம் மூவொரு இறைவனின் திருவிழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம். இது எம் சத்திய திருச்சபையினது நித்திய விழாவாகும். கடவுள் ஒருவராக இருந்தாலும், ஆள்வகையிலே மூவராக இருக்கிறார்கள் என்ற சத்திய உண்மையை எமக்கு எடுத்து உரைக்கிறது. அதாவது - தந்தை, மைந்தன், தூயஆவி என இருக்கின்ற நிலையையும், தன்மையினையும் நினைவுபடுத்தி எடுத்துக் கூறும் பெருநாள்.


எடுத்த எடுப்பிலே இந்தத் திருநாளைப் பற்றி நாம் என்ன அறிந்துகொள்ள முடியும்? இறைவன் எப்படி ஒரே கடவுள்? ஆனால் மூன்று ஆட்களாக இருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும் என்பன போன்ற வினாக்களும், ஐயங்களும் எமக்குத் தோன்றுகின்றன. இது யாவராலும், எளிதில் விளங்கிக் கொள்ள முடியாது.

எல்லாம் வல்ல பரமதந்தை, தனது ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்குப் பலியாக அளித்ததையும், இயேசு நமக்கு ஆவியானவரைக் கொடையாகக் கொடுத்து, அந்தப் பரிசுத்த ஆவியால் நாமெல்லோரும் புதுப்பிக்கப்படுவதையும் உணர, விசுவாசிக்க வேண்டிய நாள்தான் இன்றைய நாள். மூவொரு கடவுள் என்பது ஒரு மறைபொருள். அறிவியல் வாயிலாகவோ, உயிரியல் வாயிலாகவோ உணரமுடியாததொன்று. எமது ஆழமான, அசைக்க முடியாத விசுவாச ஒளியால் தான் நாம் இதை உணர்ந்துகொள்ள முடியும்.

மோயீசன் ஒரேப் மலையில் முட்புதர் எரிந்து கொண்டு இருப்பதையும், அதே நேரத்தில் அந்த முட் புதரானது - தீய்ந்து போகாமல் இருப்பதையும் கண்டு, அது ஏன் அப்படி எரிந்து, சாம்பலாகப் போகாது இருக்கிறது என இந்த விந்தையை, புதிரை அறிய முனைந்தார். ஆனால் அதை அந்த இரகசியத்தை அவரால் எப்படியும் அறிந்து கொள்ள முடியவில்லை. அதனை ஒத்ததுதான் இன்று நாம் கொண்டாடும் பெருவிழாவுமாகும். இது தந்தை, மகன், தூயஆவி என்ற மூவொரு இறைவன் சார்ந்த மாபெரும் மறைபொருளாகும்.

எமது எல்லாம் வல்ல வானகத் தந்தையைப் படைக்கின்ற கடவுளாகவும், அவரால் அனுப்பப்பட்ட, அவர் மகனாகிய யேசுவை, பாவத்திலிருந்தும், நித்திய கேட்டிலிருந்தும், மக்களை மீட்பவராகவும், இவர்கள் இருவர்களிடமும் இருந்தும் புறப்படும் தூய ஆவியான கடவுளை அர்ச்சித்து, புனிதப்படுத்தி, வழிநடத்துபவராகவும் உணருகின்றோம். தந்தையும், நானும் ஒன்றே என்றும்", என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். நான் தந்தையினுள்ளும், தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ அறியவில்லையா?" (யோவா 14:9 - 10) வரப்போகிற தூய ஆவியானவர் என்னிடமிருந்து கேட்டு உங்களுக்கு அறிவிப்பார் எனவும், இயேசு கூறியதிலிருந்து மூவொரு இறைவனின் ஒருமைப்பாட்டை உணருகிறோம்.

"தந்தை என்னை அன்புகூர்ந்ததுபோல, நானும் உங்கள்மேல் அன்பு கூருகிறேன்" என்று கூறினார் இயேசு. மீட்பின் நற்செய்தியை வெளிப்படையாக அறிவிக்கவும், பரம அன்பை வெளிப்படுத்தவும், ஆற்றல் பெற்றவரும், ஆதியிலே அசைவாடியவருமான ஆவியானவர், பெந்தக்கோஸ்து நாளில் நாம் அர்ச்சிக்கப்படுவதற்காக இறங்கி வந்ததையும் காண்கிறோம். இவ்வாறு ஒன்றுபட்ட இறை மகத்துவம் குறித்து, "உமது ஆவியை நீர் அனுப்ப, அவை படைக்கப்படுகின்றன. மண்ணகத்தின் முகத்



தைப் புதுப்பிக்கின்றீர்" எனத் திருப்பாடல் கூறுகின்றது. (தி.பா.104:30) மேலும் இயேசுவை இறை ஊழியனாகவும், எகியா இறைவாக்கினர் சித்தரிக்கின்றார் "இவர்மேல் என் ஆவியைத் தங்கச் செய்வேன்" என்கிறார்.

மூவொரு கடவுளை நாம் எப்படிச் சரியான, தகுந்தமுறையில் பயன்படுத்துகிறோம், மகிமைப் படுத்துகிறோம் என்றால், நாளாந்த திருப்பலியைக் குருவானவர் ஆரம்பிக்கும்போது" ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக" (2 கொரி 13:13) என்று புகழ் உரைத்துத் தான் ஆரம்பிக்கிறார்.

அதுமட்டுமல்லாது, மேற்கூறப்பட்ட புகழுரையை புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தை முடித்துவைக்கும்போதும், இதனையே அவர் பாவித்து, தனது திருமுகத்தை முடித்துவைத்தார். இதன் மூலம் மூவொரு கடவுளின் புகழும், பெருமையும் நன்கு புலப்படுகிறது.


இதேபோன்று நாமும் எந்தச் செபத்தை எப்படி ஆரம்பித்தாலும் "பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே" என்றுதான் ஆரம்பிக்கிறோம். இப்படி நாம் எப்போதும், எவ்வேளையிலும் பிதா, சுதன், பரிசுத்த ஆவி என நாம் அடையாளமிட்டு செபிக்கும்போது, அன்றைய நாளில் தந்தையால் அடைந்த நன்மையையும், இயேசு அளித்த மன்னிப்பையும் ஆவியானவரின் வழி நடத்துதலையும் உள்ளத்தில் பதித்துக் கொள்ளுகிறோம், புதுப்பித்துக் கொள்கிறோம். இதையே பாரம்பரியமாக திருச்சபையும் கடைப்பிடித்து வருகிறது.


தூய ஆவியின் அருளால் தான் கடவுளையும், "அப்பா தந்தாய்" என அழைக்கிறோம். இந்த மிகப் பெரும் மகிமையும், பெருமையும் எமக்கு அளிக்கப்பட்டதையிட்டு கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

"தனி முதல் இறைவனாம் தந்தையேவாழி
தனியொரு மைந்தனாம் இயேசுவே வாழி
தூய நல் ஆவியாம் இறைவனே வாழி
மூவொரு இறைவா - என்றுமே வாழி"!

### திடீர் கடற்கொந்தளிப்பினால்

# தமிழக, கேரள கடற்கரையில் 1200 வீடுகள் சேதமடைந்தன!





(நாகர்கோவில்)

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரளாவிலும் சுனாமி போல நேற்று முன்தினம் கடல் ஆர்ப்பரித்ததில் கடலோரக் கிராமங்கள் நீரில் மூழ்கின. கடற்கொந்தளிப்பால் தமிழகத்தில் 10 க்கும் மேற்பட்ட கிராமங்களில் தண்



ணீர் உட்புகுந்ததில் 700க்கும் மேற்பட்டவீடுகள் சேதமடைந்தன. கேரளாவில் 500 க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. கேரள கடற்கரை முழுவதும் நேற்று முன்தினம் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

கடந்த டிசம்பர் 26 சுனாமிக்குப் பின்னர் குமரி மாவட்டத்தில் அடிக்கடி கடற்கொந்தளிப்பு ஏற் பட்டு வருகிறது. கடந்த 17ஆம் திகதி இரவு மாவட்ட எல்லையான இரையுமன்துறையில் ஏற்பட்ட கொந்தளிப்பில் 30 வீடுகள் சேதமடைந்தன. நேற்றுமுன்தினம் அதிகாலை 5 மணிக்கு மீண்டும் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டது. மார்த்தாண்டம் துறையில் தொடங்கிய கொந்தளிப்பு - சின்னத்துறை, பூத்துறை, தூத்தூர், இரையுமன்துறை, வள்ளவிளை, தேங்காய்ப்பட்டணம், குறும்பனை, நீரோடி போன்ற இடங்களிலும் பெரிய அலைகள் எழும்பி மீனவ கிராமங்களுக்குள் புகுந்து 250 மீற்றர் தூரம் வரை தண்ணீர் புகுந்ததால், கடற்கரையில் இருந்த அனைத்து வீடுகளிலும் தண்ணீர் புகுந்தது. காலையில் இந்த அலைகளின் வேகம் மேலும் அதிகரித்ததால் மக்கள் சுனாமியோ எனப் பீதியடைந்தனர்.

காலை எட்டு மணியளவில் சுனாமியால் அதிக உயிர்ப்பலி ஏற்பட்ட குளைச்சல் கடற்பகுதியிலும் பெரிய அலைகள் எழும்பின. தொடர்ந்து கொட்டில்பாடு, சைமன்கொலனி, வாணியக்குடி, முட்டம், மணவாளக்குறிச்சி, ராஜாக்கமங்கலம் போன்ற கடற்பகுதிகளிலும் கடல் கொந்தளித்தது. இந்தத் தொடர் கொந்தளிப்பால் 700 க்கும் மேற்பட்ட மீனவர்களின் வீடுகள் சேதமடைந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட படகுகள்



சேதமடைந்ததுடன் 50 பேர் காயமடைந்தனர்.

கேரளாவிலும் கடலோரப் பகுதிகளில் இதே போன்ற பாதிப்புக்கள் ஏற்பட்டன.தெற்கு கேரளாவின் கடலோரப் பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் திடீரென இராட்சத அலைகள் எழுந்தன. பூவார் பகுதியில் கடலோர கிராமங்களுக்குள் கடல் நீர் புகுந்ததில் 100 க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 150 க்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பொழியூர் பகுதியில் 150 மீற்றர் தூரத்திற்கு கடல்



நீர் உட்புகுந்ததில் கடலோர வீடுகள் தண்ணீரில் மூழ்கின. 200 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டன. கொல்லம் மாவட்டத்தில் - ஷ்ரயீக்கல், திருச்சூர் மாவட்டத்தில் பெரிங்கானா ஆகிய இடங்களில் கடல் நீர் நீண்ட தூரம் உள்ளே புகுந்தது. இதனால் கேரள கடலோரப் பகுதிகளில் நேற்று முன்தினம் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஆண்டுதோறும் இந்த மாதத்தில் கடல் அலை அதிகமாக இருக்கும். இந்த ஆண்டு மேலும் மோசமாக உள்ளது என்று உள்ளூர் மக்கள் தெரிவித்தனர்.

## அடிக்கடி இடம்மாறுகிறார் பின்லேடன்: கவலை தெரிவிக்கிறார் குர்ஷித் கசூரி!

(இஸ்லாமாபாத்)

உயிருடன் இருக்கும் பின்லேடன், பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் ஒரு சிறு குழுவுடன் அடிக்கடி இடத்தை மாற்றி சுற்றிச் சுற்றி வருகிறாரென பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி கூறினார்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரிலுள்ள 110 மாடி இரட்டைக் கோபுரத்தை விமானங்களைக் கடத்தி, தாக்கியழித்து ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்ட அல்கொய்டா இயக்கத்தின் தலைவர் பின்லேடன்.

அதைத் தொடர்ந்து பின்லேடனை ஒழிக்க ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா முப்படைத் தாக்குதலை நடத்தியது. அமெரிக்க போர் விமானங்கள் போட்ட குண்டுகளில் ஆப்கானிஸ்தான் மலைப் பகுதியே சின்னாபின்னமானது. இதில் பின்லேடனும் அவருடன் தப்பியோடிய ஆப்கானிஸ்தான் அதிபர் முல்லா ஒமரும் பலியாகியிருக்கலாம் என்றுகூட முதலில் கருதப்பட்டது. ஆனால், அதன் பின்பும் பின்லேடன் அல்ஜசீரா தொலைக்காட்சியில் தோன்றி அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுத்தார். சமீபத்தில் நடந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்புகூட அல்ஜசீரா தொலைக்காட்சியில் தோன்றி அமெரிக்காவை மீண்டும் தாக்கப்போவதாக மிரட்டினார்.

பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள மலைப் பகுதியில்தான் பின்லேடன் ஒளிந்திருப்பதாக பாகிஸ்தான் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கு பெரியளவில் ராணுவத்தை அனுப்பி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது.

இதில் ஏராளமான அல்கொய்டா இயக்கத்தினரும் பல நாடுகளைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட்டனர். மேலும் பலர் உயிருடன் பிடிக்கப்பட்டனர். இந்தநிலையில், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி, அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் திரும்பினார்.

கராச்சி நகரில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது -

அல்கொய்டா தலைவர் பின்லேடன் சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறார். பின்லேடனைப் பிடிப்பதில் பாகிஸ்தான் இராணுவம் தீவிரம் காட்டவில்லையென்று பல்வேறு நாடுகள் குற்றம்சாட்டுகின்றன. பின்லேடன் ஒரு இடத்தில் நிரந்தரமாக தங்கியிருப்பதில்லை.

சிறு குழுவுடன் தனது இருப்பிடத்தை அடிக்கடி மாற்றி சுற்றிச் சுற்றி வருகிறார். பெரிய கூட்டத்துடன் சென்றால் கண்டுபிடித்துவிடலாமென்ற அச்சத்தில் சிறுகுழுவாக இடம்பெயர்ந்து செல்கிறார். அவரைத் தேடிப்பிடிக்கும் முயற்சியை பாகிஸ்தான் ராணுவம் கைவிடவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.


## உலக நோக்கு

### முதல்முறையாக டிஸ்கவரி ரொக்கட்டை அனுப்புகிறது அமெரிக்க நாஸா

அமெரிக்காவின் கொலம்பியா ரொக்கெட் கடந்த 2003 ஆம் ஆண்டு நடுவானில் வெடித்துச் சிதறியதற்கு பின்னர், முதல் தடவையாக நாஸா டிஸ்கவரி ரொக்கெட்டை அடுத்தமாதம் விண்வெளிக்கு அனுப்புகிறது. டிஸ்கவரி ரொக்கெட் புளோரிடா ஏவுதளத்துக்கு கொண்டு வரப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதன் எரிபொருள் தாங்கியில் ஏற்பட்ட கசிவும் சரி செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு நடத்தப்பட்ட சோதனை வெற்றி பெற்றது. நேற்று 2 ஆவது கட்ட சோதனையும் வெற்றி பெற்றது. ரொக்கெட்டில் எந்தக் கோளாறும் இப்போது இல்லை என்று நாஸா விண்வெளி நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜுன் மாதம் செலுத்தப்படும் டிஸ்கவரி ரொக்கெட் ஜுலை 13 ஆம் திகதி பூமிக்கு திரும்பி விடும் வகையில் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



# உள்ளாடையுடன் சதாமின் படங்கள் லண்டன் சன் பத்திரிகையில் வெளியீடு

சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சதாம் ஹுசைன் உள்ளாடையுடன் நிற்பது, துணி துவைப்பது போன்ற காட்சிகள் ரகசியமாக படம் எடுக்கப்பட்டு லண்டன் பத்திரிகையில் வெளியிடப்பட்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் நாட்டின் அசைக்கமுடியாத அதிபராக சர்வ அதிகாரத்துடன் கொடிகட்டிப் பறந்தவர் சதாம் ஹுசைன். அவரை வீழ்த்தியே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு களமிறங்கிய அமெரிக்கா தனது முயற்சியில் வெற்றியும் பெற்றது. அமெரிக்கா தொடுத்த போரில் சதாமின் ஆட்சி வீழ்ந்தது.

இதன்பின் தலைமறைவாக இருந்த சதாம்- கடந்த 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பாதாள அறைக்குள் பதுங்கி இருந்தபோது அமெரிக்கப் படைகளால் உயிரோடு பிடிக்கப்பட்டார். தற்போது அவர் ஈராக்கில் ஒரு ரகசிய இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ளார். கடந்த அண்டு அவர் நீதிமன்றில் ஆஜரானபோது அவருடைய படங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. அதன் பின்னர் அவர் எப்படி இருக்கிறார். சிறையில் எப்படி பொழுதைக் கழிக்கிறார் என்பது வெளியுலகுக்கு தெரியாமலேயே இருந்து வந்தது.

இந்த நிலையில் லண்டனிலிருந்து வெளியாகும் பிரபலமான 'சன்' ஆங்கிலப் பத்திரிகையில் நேற்று முன்தினம் சதாம் ஹுசைனின் அதிர்ச்சியூட்டும் படங்கள் வெளியிடப்பட்டன. 'உள்ளாடையுடன் கொடுங்கோலன்' என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் சதாம் ஹுசைன் நிற்பது போன்ற முழுப்பக்கப் படம் வெளியிடப்பட்டிருந்தது.சதாம் தன் கையில் ஜீன்ஸ் வைத்திருக்கிறார். அதாவது அவர் உள்ளாடை அணிந்த பிறகு அதனைப் போடுவதற்காக தயாராகும் நேரத்தில் ரகசியமாக அந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது.

உள்பக்கங்களில் சதாம் ஹுசைன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தபடி தனது துணிகளைக் கையால் துவைப்பதுபோன்றும், படுக்கையில் அமர்ந்து தூங்குவது போன்றும், தலைமுடி, மீசைக்கு டைஅடித்து கருகரு முடியுடன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து இருப்பது போன்றும் 3 படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

'சிறையில் சதாம் ஹுசைனின் முதல் முறையாக வெளியாகும் அபூர்வப் படங்கள்' என்ற தலைப்புடன் செய்திக் கட்டுரையையும் அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.அந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருப்பதாவது -

இந்தப் படங்கள் அமெரிக்க ராணுவத்திடமிருந்து எங்களுக்குக் கிடைத்தது. ஈராக்கில் தினமும் கொடூர தாக்குதலில் ஈடுபட்டு வரும் சதாம் ஹுசைன் ஆதரவுப் படைகளை மனதளவில் காயப்படுத்த வேண்டும். தாங்கள் தெய்வமாக நினைக்கும் தங்கள் தலைவர் எப்படி இருக்கிறார் என்பதைப் படத்தில் பார்த்து மனம் தளர்ந்து துடிக்கவேண்டும் என்பதற்காக இந்தப் படத்தை வெளியிடுவதாக ராணுவத் தரப்பில் கூறினார்கள்.


சதாம் ஹுசைன் மிகப்பெரியவரோ, கடவுளோ அல்ல. அவர் சாதாரண ஆள்தான். இப்போது வயதான, ஆணவம் ஒடுங்கிய, பணிவான முதியவர்தான் என்பதை ஈராக் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவரை தன்னிகரில்லாத் தலைவனாக நினைக்கும் கூட்டத்திற்கு உண்மையை உணரவைக்க வேண்டும் என்பதற்காக இந்தப் படங்கள் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தப் படங்களைப் பார்த்த பிறகாவது சதாமின் ஆதரவாளர்களின் மனதில் அவரைப் பற்றிய கற்பனைத் தோற்றம் மறையும் என்று எதிர்பார்க்கிறோம் என அந்தச் செய்திக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், சதாமின் படங்களை நாங்கள் வெளியிடவில்லை என்று மறுப்புத் தெரிவித்த அமெரிக்க ராணுவத் தரப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு -

சிறையிலுள்ள சதாம் ஹுசைனின் படங்களை யார் எடுத்தார்கள்? யார் பத்திரிகைக்கு கொடுத்தார்கள்? என்பது எங்களுக்குத் தெரியவே தெரியாது. இது பற்றி விசாரணை நடத்தி வருகிறோம். தவறு செய்தவர்கள் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறையில் இருக்கும் கைதியை இது போன்று




படங்கள் எடுப்பது ராணுவ விதிமுறைகளை மீறிய செயலாகும். சிறையிலுள்ள கைதிகள் பற்றிய ஜெனிவா ஒப்பந்த வழிமுறைகளை மீறி இந்தப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மீண்டும் இதுபோல் நடக்காமல் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஈராக்கில் சிறைக்கைதிகளின் வாழ்க்கை ரகசியமாகப் படமாக்கப்பட்டு வெளியே கசிவது இது முதல் முறை அல்ல. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பாக்தாத் சிறையில் ஈராக் கைதிகளை அமெரிக்க ராணுவத்தினர் எப்படியெல்லாம் சித்திரவதை செய்தார்கள் என்பதை விபரிக்கும் படங்கள் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வெளியிடப்பட்டு உலக மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

அதேபோன்று இப்போது சதாமின் சிறைப் படங்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கதிர்காமர் தமிழினத்துக்கே இழுக்கு ஏற்படுத்தும் ஒருவர்!

## நாடாளுமன்றத்தில் ஈழவேந்தன்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழினத்துக்கே பெரும் அவமானமான ஒருவர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் உரையாற்றிக்கொண்டிருந்தபோது - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சபைக்குள் பிரவேசித்தார்.

அப்போது அவரைச் சுட்டிக்காட்டி - இவர் தமிழினத்துக்கே இழுக்கான ஒருவர் என ஈழவேந்தன் தெரிவித்தார்.

ஈழவேந்தனின் இந்தக் கருத்துக் குறித்து தமதுரையில் பிரஸ்தாபித்த அமைச்சர் கதிர்காமர், இவ்வாறான உரையொன்றுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் தமக்குக் கிடையாதெனத் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அமைச்சர் கதிர்காமர் - உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரை குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டாலும் அந்த உரை மிகவும் வரவேற்கத்தொன்று.

மிகவும் நீண்டகாலம் பிடிக்கக் கூடிய இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரத்தைவிட, தற்போது அவசர பிரச்சினையாக இருக்கின்ற கடற்கோளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்ற விடயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியமானது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கையின் இறைமை பற்றி விவாதித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை என்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

# வெசாக் பண்டிகையை விமரிசையாக கொண்டாடுவதற்கு படையினர் ஏற்பாடு

## செய்தியாளர் மாநாட்டில் சுனில் தென்னக்கோன்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இம்முறை பலாலி இராணுவத் தலைமையகமும், 51ஆவது படையணியும் இணைந்து வெசாக் பண்டிகையை வெகு விமரிசையாகக் கொண்டாடவுள்ளதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

நேற்று, யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னகோன், 51 வது டிவிசன் தளபதி பிரிகேடியர் பன்னிப்பிட்டிய, சிரேஷ்ட அதிகாரி கேணல் மாயதுன்ன, பலாலி உயர் பாதுகாப்பு வலய கட்டளை அதிகாரி கேணல் உடவத்த, கேணல் இராஜசிங்க ஆகியோர் கலந்துகெண்டனர்.

அங்கு இராணுவத்தளபதி சுனில் தென்னக்கோன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் 36 வெசாக் கூடுகள் அமைக்கப்படவுள்ளன. இதைவிட உசனில் 15 வெசாக் கூடுகளும், கொடிகாமத்தில் 10 வெசாக் கூடுகளும், வரணியில் 9 வெசாக் கூடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இதனைப் பொதுமக்கள் பார்வையிட முடியும். எந்தச் சோதனை நடவடிக்கைகளும் இடம்பெறமாட்டாது.

தற்போது இடம்பெற்றுவரும் சமாதான சூழலுக்கு இவ்வாறான செயற்பாடுகள் உகந்ததாக காணப்படும். இதேவேளை பக்திப்பாடல் இசை நிகழ்வொன்றும் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நான்கு...

முன்னர் பொதுக்கட்டமைப்பின் திட்டங்கள் குறித்த விபரங்களடங்கிய உத்தியோக பூர்வ கோர்வை பிரதி தமக்கு தரவேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஆனால் ஜனாதிபதி அந்த ஆவணங்களை ஜே.வி.பிக்கு வழங்கவில்லை. இயன்றவரை ஜே.வி.பியின் சம்மதத்துடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்தாலும் அதற்கு ஜே.வி.பி தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவிக்குமாயின் அந்த எதிர்ப்பை கருத்தில் கொள்ளாது பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான கோவையில் கைச்சாத்திடப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, உலக வங்கியின் பிரதித் தலைவர் பிரபுல்பட்டேல், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரிடம் கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் வைத்துத் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(தே)

### குடாநாடு...

செய்த இராணுவத் தளபதி, ஆலோசனைகளை நடத்தியதுடன் படையினரைச் சந்தித்தும் உற்சாகமூட்டினார்.

அத்துடன், நாகர்கோவிலில் பழுது பார்க்கப்பட்டு - புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்னணிக் காவல்நிலைகளைப் பார்வையிட்ட இராணுவத் தளபதி அங்குள்ள நிலைமை தொடர்பாக சிரேஷ்ட அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டில் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட இராணுவத் தளபதி, இரவுப் பொழுதைக் கழித்த பின்னர் நேற்றுக் காலையே திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவருடன் இராணுவத் தலைமையக பொது அதிகாரிகளுக்கான இயக்குநர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி, சமிக்ஞைப் படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் ஈ.பி.டி.இசற்.அபேசேகர, இராணுவ புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் பிரிகேடியர் ஏ.ஆர். ஷக்கி ஆகியோரும் குடாநாட்டுக்கு விஜயம் செய் திருந்தனர்.

இராணுவத் தளபதியின் இந்த விஜயத்தின்போது - குடாநாட்டின் பாதுகாப்புச் சூழல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவு, சமிக்ஞை படைப் பிரிவுத் தளபதிகளுடன் இராணுவத் தளபதி விஜயம் செய்தமையும் - சகல பிரதான படைத்தளங்களையும் இவர்கள் பார்வையிட்டதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

### நாட்டில்...

ஒடினாலும்கூட புத்தர்சிலை அகற்றப்படமாட்டாது என்றும் - புத்தர்சிலையைப் பாதுகாக்கவும் - நகரில் இயல்பு நிலையை ஏற்படுத்தவும் படையினர் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் படைத்தளபதிகளிடம் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை -

புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக எழுந்துள்ள பதற்ற நிலையை தீர்ப்பது குறித்து நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் திருமலையில் சர்வமதக் கூட்டம் நடத்தப்பட்டது. திருமலை கடற்படைத் தளத்தில் காலை 11.30 மணியளவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதப் பெரியார்கள் கலந்துகொண்டனர்.

முப்படைத் தளபதி மற்றும் பொலிஸ் மா அதிபர், கிழக்குப் பிராந்திய பொலிஸ் மா அதிபர், திருமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை - கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட பௌத்த பிக்குகளும் சிலையை நிறுவியதாக உரிமை கோரும் ஐக்கிய ஓட்டோ சாரதிகள் சங்கச் செயலாளர் கீர்த்தி பிரியலாலும் கூட்டத்தைப் பகிஷ்கரித்திருந்தனர்.

தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதேவேளை - இன்றுமுதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பௌத்த மக்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடுவதற்கு உதவும் வகையில் கண்டனக் ஹர்த்தால் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்திக்கொள்வதாகவும் விக்னேஸ்வரன் பாதுகாப்புச் செயலாளருக்குத் தெரிவித்தார்.

25 ஆம் திகதிக்கு முன் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க சிலை அகற்றப்படாதுவிட்டால் 26 ஆம் திகதி முதல் பாரிய மக்கள் போராட்டம் தொடருமென்றும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க - கூட்டம் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகுமென மதகுருமாரும் ஏனையோரும் அழைக்கப்பட்டிருந்த போதும் பகல் 11.30 மணிக்கே கூட்டம் ஆரம்பமாகி பிற்பகல் 2.30 மணி யளவில் முடிவடைந்தது.

(04-10)

### திருமலை...

அதிகாரிகளும் கலந்துகெண்டனர்.

இந்த பாதுகாப்பு மாநாட்டில் திருகோணமலையில் பதற்றத்தைத் தணிப்பதற்கான முயற்சிகள், பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் வடக்கு - கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு நிலைமைகள் என்பன தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

### படையணி..

நேற்றுமாலை 4.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நிதர்சன நிறுவனப் போராளி வீரா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் ஏற்றிவைத்தார்.

நிகழ்வின் சிறப்புரையை முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஜெயந்தன் படையணியின் வெல்லும்வரை செல்வோம் என்ற பாடல் இறுவெட் டினை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தள பதிகளில் ஒருவரான சாந்தன் வெளியிட்டு வைக்க ஓவியர் புகழேந்தி பெற்றுக் கொண்டார்.

சோதியா படையணியின் விழி நிமிர்த்திய வீரம் பாடல் இறுவெட்டை சோதியா படையணியின் தளபதிகளில் ஒருவரான மதுரம் வெளியிட்டு வைக்க கவிஞர் நாவண்ணன் பெற்றுக்கொண் டார்.

தொடர்ந்து பாடல் உருவாக்கத்துக்கான கலைஞர்களுக்கு பரிசளிப்புக்கள் இடம்பெற்றன.

பணிநிலை வேண்டுகை

நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் கீழ்க்காணும் பணியாளருக்கான வெற்றிடங்கள் உள்ளன.
திறமையும், ஆர்வமும், தகைமையும் உடையோர் 26.05.2005 அன்று காலை 10 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

கணினி தட்டெழுத்தாளர்கள் / பக்க வடிவமைப்பாளர்கள்

தட்டெழுத்தாளர்கள்
தமிழில் வேகமாகவும், பிழையின்றியும் தட்டச்சுச் செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

பக்க வடிவமைப்பாளர்கள்
Photoshop, Corel Draw, Page Maker ஆகியவற்றில் அனுபவமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இயந்திர இயக்குநர் / அச்சு இயந்திர உதவியாளர்கள்

இயந்திர இயக்குநர்
KORD மற்றும் SOLONA இயந்திரங்களில் வண்ண அச்சு வேலைகள் செய்யக்கூடிய அனுபவத்தகைமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

அச்சு இயந்திர உதவியாளர்கள்
மேற்படி இயந்திரங்களில் அச்சிடல் வேலை பழக விரும்பும் ஆர்வமுடையவர்களாக இருக்க வேண்டும்.

நிர்வாகப் பணிப்பாளர்,
நமது ஈழநாடு.

பபு றெக்ஸ்
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணிவகைகள், சுடிதார் வகைகள், கவுஸ்கோட் துணி வகைகள், லேடீஸ் கவுன், ரீ சேட், ஸ்கேட், பிளவுஸ், கிப்ட் வகைகள், ஒரிபிலேம் கிறீம் வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பபு கொமினிகேசன்
(பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கு அருகில்)
இல: 30, வளாகவீதி,
திருநெல்வேலி.

A/L பரீட்சை
வழிகாட்டல் கருத்தரங்கு
பொருளியல்
திரு.இராஜேஸ்வரன்
திங்கள் செவ்வாய் 9 - 2 மணி
DMI
யாழ்ப்பாணம்.
(C/4144)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் இராஜகோபால்

[செம்பியன் செல்வன்]



ஈழத்தின் மூத்த எழுத்தாளராகிய திரு.ஆறுமுகம் இராஜகோபால் நேற்றுமுன்தினம் (20.05.2005) காலமானார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் தமர் தாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், சந்தியாம்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புனவேஸ்வரி அவர்களின் பாசமிகு துணைவரும், காலஞ்சென்ற கணேசபிள்ளை அவர்களின் தம்பியும், இராகுலனின் (தரம் 09, பரியோவான் கல்லூரி) அன்புத் தந்தையும், கௌரி, அபி, காயா, ஆனந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகள் முடிவடைந்த பின்னர், அவரது இல்லத்தில் இருந்து திங்கள் காலை 10 மணிக்கு (23.05.05) தகனத்திற்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

10, புதிய வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்
இ. புவனேஸ்வரி
(மனைவி)

### திருமதி மீனாட்சி திருவம்பலம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல.266, சில்வா வீதி, வட்டக் கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருவம்பலம் மீனாட்சி அவர்கள் 21-05-2005 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-05-2005 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 1 மணியளவில் மம்மில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இல.266,
சில்வா வீதி,
வட்டக்கச்சி.

தகவல் :
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்.

### திருமதி திருச்செல்வம் கனகசுந்தரம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருச்செல்வம் கனகசுந்தரம் அவர்கள் 20-05-2005 அன்று காலமானார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 22-05-2005 ஞாயிற்றுக்கிழமை கரம்பொனில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பருத்தியடைப்பு உருண்டி மயானத்தில் தகனத்துக்காக 2மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
மகன் தி.சந்திரசேகரம்
(சுப்பிரமணியம்)

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இராமநாதபுரம்
# மாவடி ஸ்ரீ மாரிஅம்பாள் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்பிதழ்
# 22.05.2005

## ஆலய வரலாறு

இலங்கையின் வடபால் வன்னி வள நாட்டின் வளங்கொழிக்கும் கிளிநொச்சியின் கிழக்கே நீர் வளம், நிலவளம் ஒருங்கே அமையப்பெற்ற இராமநாதபுரம் எனும் பதியின் கண்ணே புழுதி ஆற்றங்கரையில் கோயில் கொண்ட மகாமாரி அம்பாள் அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணமாக அருட்காட்சி அளிக்கின்றார்.

இந்த ஆலயம் புழுதி ஆற்றங்கரையில் மாமர விருட்சம் ஒன்றின் கீழ் தோன்றியுள்ளமையால், மாவடி அம்மன் என நாமம் பெற்று, காலப் போக்கில் அந்த மாமர விருட்சம் மறைந்து, அந்த இடத்திலே ஆலமரம் தோன்றி, விருட்சமாகி அடியார்களுக்கு ஆறுதல் வழங்கி வருகின்றது. இந்த ஆலயத்தில் ஆரம்பத்தில் ஆனித் தினங்களில் ஆனி உத்தரப் பெரும் பொங்கல்



விழா நடைபெற்று வந்தது. பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் காவடி, பால்செம்பு போன்ற நேர்த்திக் கடனை பல ஆலயங்களிலிருந்து தொடங்கி, இரவு - பகல் முழுமையாகத் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றி வந்தனர், வருகின்றனர். பின்னர் இந்த ஆலயத்தில் அலங்காரத் திருவிழாவும் 1998 ஆம் ஆண்டு முதல் மஹோற்சவப் பெருவிழாவும் நடைபெற்று வருகின்றது. அத்துடன் இந்த ஆலயத்தில் சமய விசேட நாட்களில் அனைத்துக் கிரியைகளும் முறைப்படி நடைபெற்று வருகின்றது. மேலும் சமய நெறியை மாணவர்களுக்குப் புகட்டும் வகையில் திருநெறிக்கழகத்தின் அனுசரணையுடன் அறநெறி வகுப்புக்களும் சமய அறிவுப் போட்டிகள் வைத்து, பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வரு வதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தில் இந்த ஆண்டு மஹோற்சவப் பெருவிழாவின் போது, மாரி அம்பாள் அலங்கரிக்கப்பட்ட தேரில் ஏறி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கும் காட்சியைக் கண்டு எம்பிராட்டியின் அருட்கடாட்சத்தினைப் பெறும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இராமநாதபுரம் அருள்மிகு மாவடி மாரிஅம்பாள் தேவஸ்தான
மஹோற்சவ பிரதம சிவாச்சாரியார்
பிரம்ம ஸ்ரீ.சு.செந்தில்ராஜ சிவாச்சாரியார் அவர்களின்

## அருளாசியுரை



ஈரேழு பதினான்கு உலகங்களையும் படைத்துக்காத்து ரக்ஷிக்கும் அகிலபுவன மாதாவாகிய ஸ்ரீ மகாமாரி அம்பாள், ரதத்திலே ஆரோகணித்து, ஆன்மகோடிகளைப் பற்றியிருக்கும் மும்மலங்களை நாசம் பண்ணி, அவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் இந்தப் புனித உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறவும், வருங்காலத்தில் அம்பிகைக்கு ஒரு புதிய சித்திரத் தேர் அமையவும், சகல ஜீவகோடிகளுக்கும் அன்னையின் திருவருள் நிறைவாகக் கிட்டவும் அவளின் பொற்பாத கமலங்களைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

"அன்னையின் திருவருள்
எங்கும் பொலிவதாக"

## திருநெறிக்கழகத் தலைவரின் ஆசியுரை

மெய்யன்புடைய அம்மன் அடியார்களே!

எமது மாவட்டத்தில் சிறந்த அம்மன் ஆலங்யங்களுள் ஒன்றாக மாவடியம்மன் ஆலயம் திகழ்கின்றது. அந்த ஆலயத்தில் தேர்த்திருவிழா சிறப்புடன் நடைபெறும் இந்தத் தருணத்தில் நாம் அன்னையின் அருளாட்சி பெற்று, எமது ஆணவ இருளை அகற்றி, மெஞ்ஞான ஒளியை அகத்தில் ஏற்றி அம்மனை வழிபடுவது அவசியமானதாகும்.

மேலும் மாவடி அம்மன் ஆலயம், சமய வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் எமது கழகத்திற்கு உறுதுணையாகவுள்ளது. அனைத்து மாணவர் மத்தியில் சமய உண்மைகளைப் போதிப்பதற்குரிய அறநெறி வகுப்புக்களை ஒழுங்காக நடாத்தி வருவதற்கு ஆலய நிர்வாகம் பல வழிகளில் உதவி புரிகின்றது.

சிவராத்திரி அன்று சைவ வினாவிடைப் போட்டி போன்றவற்றை நடாத்தி, மாணவரை ஊக்கப்படுத்திப் பரிசில்களை ஆலய பரிபாலன சபையே வழங்கி வருவது பாராட்டக்கூடிய செயலாகும். இறை பணியைக் கழகம் தொடர, மாவடியம்மன் ஆலய பரிபாலன சபை தூண்டு கோலாக விளங்குகின்றது. அம்மனுக்குச் சித்திரத் தேர் ஒன்றை அமைக்க மக்கள் தங்களாலான உதவி புரியவேண்டுமென்று இத்தத்தினத்தில் வேண்டிக்கொள்கின்றேன். தமிழ் மக்களின் துன்பங்கள் நீங்கி, இன்பம் பெருக எல்லாம் வல்ல அம்மன் தாள் பணிந்து வேண்டுவோம்.

திரு.மகாலிங்கம் (தலைவர்)
திருநெறிக்கழகம், கிளிநொச்சி.


## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

சகல மருந்து வகைகளையும், பால்மா வகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**அன்னை மருந்தகம்**
சந்தையடி,
வட்டக்கச்சி.

மக்கள் மனம் விரும்பும் ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வகைகளுக்கும், அழகு சாதனப் பொருட்களுக்கும் சிறந்த இடம்
**தமிழ்வாணி பிடவை அழகு வாணிபம்**
(சீலன் பிடவை அழகு வாணிபம்)
அங்காடி அருகாமை, வட்டக்கச்சி.

கட்டிடப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், எரிபொருள் வகைகள், துவிச்சக்கர வண்டி, உதிரிப்பாகங்கள் என்பன பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**கிளி முருகன் பல்பொருள் வாணிபம்**
இல.25, சில்வா வீதி, வட்டக்கச்சி.

அழகிற்கு அழகு செய்யும் தங்க நகைகளுக்கு நீங்கள் தவறாமல் நாடவும், 22 கரட் தங்க நகைகளை ஓடர் மூலம் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
**புதிய கலைவாணி நகை மாடம்**
யாழ்.சாலை, பளை.
உரிமையாளர்: V.K.N

உங்களுக்குத் தேவையான அழகு சாதனப் பொருட்களையும், அன்பளிப்புப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
**இளநங்கை அழகுச் சோலை**
(வரதா அழகுச் சோலை)
யாழ்.சாலை, கிளிநொச்சி.

அழகு சாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள ஒரே இடம்
**கோகுலன் விற்பனை நிலையம்**
அங்காடி அருகாமை, வட்டக்கச்சி.
உரிமையாளர்: ப.கோகுலதாஸ்

**தனுசன் திரையரங்கு**
சுகுணா கடைச் சந்தி,
வட்டக்கச்சி.
உரிமையாளர்:
சு.பெரியதம்பி (ரெயிலர்)

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
**நிதர்சனா நகையகம்**
சந்தை உட்புறம்,
வட்டக்கச்சி.

**மாவடி அம்மன் பல்பொருள் வாணிபம்**
அனைத்து வகையான பலசரக்குப் பொருட்களையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
அங்காடி உட்புறம், வட்டக்கச்சி.

கிருமி நாசினி வகைகள், உரவகைகள், எரிபொருள் விற்பனையாளர்
**தூயமணி விற்பனை நிலையம்**
அங்காடி அருகாமை,
வட்டக்கச்சி.

உங்கள் இல்லங்களில் இடம்பெறும் பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் வைபவங்களுக்கு கலர், கறுப்பு/ வெள்ளைப் படங்களை எடுத்துக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
**தமிழ்நதி புகைப்படக் கலையகம்**
(சங்கர் போட்டோ)
சந்தையடி,
வட்டக்கச்சி.

எரிபொருள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
**சுடர் நிலா எரிபொருள் வாணிபம்**
சுவிட் சென்ரர், வட்டக்கச்சி.
உரிமையாளர்: குமார்.

**அறநிலா அழகு மாடம்**
அழகு சாதனப் பொருட்கள், எரிபொருள், உதிரிப்பாக விற்பனையாளர்.
211, சிவசுந்தரம் வீதி,
வட்டக்கச்சி.

## 'கலாபூஷணம்' விருது பெற்ற
## திருக்கணித பஞ்சாங்க கணிதர், "வேதாகம சோதிட பூஷணம்"
## சிவஶ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்கள் அவர்களுக்கு

# கௌரவிப்பு விழாவும்
# நூல் வெளியீட்டு விழாவும்



**வேதாகம சோதிட பூஷணம், கலாபூஷணம்**
**சிவஶ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்**

| | |
|---|---|
| 1. பிறந்த திகதி | : 1935.12.18 |
| 2. தந்தை பெயர் | : சிதம்பர ஐயர் |
| 3. ஆரம்பக் கல்வி | : சாவகச்சேரி இந்துக் கல்லூரி. |
| 4. சிவாச்சாரியாபிஷேகம் | : 1963 |
| 5. திருமணம் | : 1956 |
| 6. பிள்ளைகள் | : 6 ஆண்கள், 2 பெண்கள். |
| 7. பெற்ற கௌரவப் பட்டங்கள் | : வேதாகம சோதிட பூஷணம், சிவாச்சார்ய திலகம், சிவாகமபூஷணம், வேதாகம வித்தர், கலாபூஷணம். |
| 9. தெரிந்த மொழிகள் | ; தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம். |
| 10. பெற்றுள்ள விசேட தகைமைகள் | : பஞ்சாங்க கணிதம், வானியல் சாஸ்திரம், கிரகணம் சம்பந்தமான நுண்கணிதம். |

தென்மராட்சிப் பிரதேசத்துக்குப் பெருமை தேடித்தந்தவர்களுள் முக்கிய மானவராக அண்மையில் கலாபூஷண விருது பெற்ற 'வேதாகம சோதிட பூஷணம்', சிவஶ்ரீ.சி.சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள் விளங்குகின்றார். இலங்கையிலேயே சோதிடம் மற்றும் சிவாசார்யப் பணிகளுக்காக கலாபூஷணம் விருது பெற்ற முதலாவது சமயப் பெரியார் இவராவார்.

சிவாச்சார்யப் பணி, ஆலய விவகாரம், பஞ்சாங்கக் கணிதம் – சோதிடம், அர்ச்சகர் – பிரசுரிப்பாளர் ஆகிய முத்துறைகள் ஊடாக சமூகத்துடனான தொடர்புகளை நெருக்கமாகக் கொண்டிருந்த குருக்கள் ஐயா தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவருமாவார்.

1963 ஆம் ஆண்டிலே சிவாச்சார்ய அபிஷேகம் செய்துகொண்ட நாள் முதல், இன்றுவரை இலங்கையின் பல பாகங்களிலும், மலேசியா, லண்டன் முதலாய வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு ஆலயங்களின் மகா கும்பாபிஷேகத்தையும், மஹோற்சவத்தையும் தலைமை தாங்கி நடாத்தி வருகின்றார். அத்தோடு பிராமணர்களின் பூர்வ – அபரக் கிரியைகள், ஆலய கட்டட நிர்மாணம், கோவில் அமைப்பு முறை, நித்திய, நைமித்திய ஒழுங்குகள் போன்றவற்றிலும் சிறந்து விளங்குகின்றார்.

சுத்தமான கணித முறைப்படி பஞ்சாங்கம் கணிப்பிட்டு, திருக்கணித பஞ்சாங்கம் என்னும் பஞ்சாங்கத்தை இலங்கையிலும், கோலாலம்பூர், ஹொறன்டோ, லண்டன், சுவிஸ் போன்ற இடங்களை மத்திய நாடியாகக் கொண்டு கணிக்கப்படும் மலேசியா– சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளிலும் வெளியிட்டு வருகின்றார்.

திருக்கணிதப் பதிப்பகம் என்னும் பெயரில் அச்சியந்திரசாலை ஒன்றையும் தாபித்து நடாத்தி வருகின்றார். திருக்கணித பஞ்சாங்க கணிதர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தாபித்த ஜோதிஷரத்னாகர அச்சியந்திரசாலையை திருக்கணித நிலையம் எனப் பெயர்மாற்றி இயக்கி தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் நூல்களை அச்சிடக்கூடிய ஒரேயொரு நிலையமாக இதனை விளங்க வைத்தார்.

விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் எடுத்தல், ஜாதகக் குறிப்பு எழுதுதல் போன்ற ஜோதிடக் கணிப்பு வேலைகளிலும் முழு மூச்சாக ஈடுபட்ட குருக்கள் ஐயா – இன்று கலாபூஷண விருது வழங்கப்பெற்று, இந்துகலாசார அமைச்சினால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இது அவருக்கு மட்டும் கிடைத்த கௌரவமல்ல, தென் மராட்சி மக்களுக்கே ஏன், முழு சைவ அபிமானிகளுக்கும் கிடைத்த கௌரவம் எனலாம்.

இதனால் தான் இந்த விருது பெற்றமையைக் கௌரவித்து, தென்மராட்சி மக்களால் மிகப்பெரும் விழா எடுக்கப்படுகின்றது. குருக்கள் ஐயா மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி. பிரதான மண்டபம்
காலம் : 22.05.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி.
தலைமை : பேராசிரியர் க.கந்தசாமி அவர்கள்
(தலைவர். தென்மராட்சி நலச்சேவைச் சங்கம்)

### நிகழ்வுகள்

விழா நாயகரை மங்கள வாத்திய சகிதம் மண்டபத்திற்கு அழைத்துவரல்
மங்கள விளக்கேற்றல்
வேதபாராயணம் : பிரம்மஶ்ரீ சோ.மதுசூதனக் குருக்கள் அவர்கள்
தேவார பாராயணம் (பண்ணிசை) : செல்வன் கு.ஜெகதீசன் அவர்கள்
வாழ்வகம் (விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்) சுன்னாகம்.
வரவேற்புரை : திரு.வை.விஜயகுமாரன் அவர்கள்
(ஆசிரியர் யாழ். கொடிகாமம் அ.த.க. பாடசாலை)
தலைமையுரை
ஆசியுரைகள் : 1. மகாராஜ ஶ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்
(மாவை ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்)
2. பிரம்மஶ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்
(பீடாதிபதி சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம்)
அருளுரை : நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்.
வாழ்த்துரைகள்: சிவஶ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் அவர்கள்
(தலைவர், அகில இலங்கை சைவக் குருமார் ஒன்றியம்)
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)
கௌரவ ந.ரவிராஜ் அவர்கள் (பா.உ. யாழ். மாவட்டம், சாவகச்சேரி)
திருமதி பத்மராணி சிவஞானராசா அவர்கள்
(கலாசார உத்தியோகத்தர் தென்மராட்சி)
திரு.பொ.ஈஸ்வரன் அவர்கள் (அரசியற்துறைப் பொறுப்பாளர் தென்மராட்சி)
சைவப்புலவர் திரு.சி.க.கமலநாதன் அவர்கள்
(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
விழா நாயகர் கௌரவிப்பு
பொன்னாடை அணிவித்தல் : திரு.க.மகேஸ்வரன் அவர்கள்
(சரசை வீரமாகாளி அம்மன் ஆலயம்)
பொன்னாரம் அணிவித்தல் : திரு.சி.இராமலிங்கம் அவர்கள்
(மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம்)
வாழ்த்துப்பா வாசித்து வழங்கல் : சங்கீத வித்துவான் பொன் ஶ்ரீ வாமதேவன் அவர்கள்
வாழ்த்து : கலாபூஷணம் கே.எம்.பஞ்சாபிகேசன் அவர்கள்
சபையோர் விழா நாயகரைக் கௌரவித்தல்

### நூல் வெளியீடு

நூல் : சோதிடம் கற்போம்
அறிமுகம் : பிரம்மஶ்ரீ ப.சிவானந்த சர்மா அவர்கள் (கோப்பாய் சிவம்)
வெளியீடு : பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள்
(முன்னாள் கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)
ஆய்வு : கலாநிதி க.வேதநாதன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
முதற்பிரதி பெறுநர் : திரு.கா.பாலசுப்பிரமணியம் அவர்கள் - மட்டுவில்
(தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கிளிநொச்சி)


**விளம்பர அனுசரணையாளர்கள் :**

**தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்**
தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்.

Dealers in Electrical & Electronic Authorized Dealer for Abans Ltd. Sole Distributor for KML Cables
**JAFFNA ELECTRICALS**
141, Power House Road, Jaffna. 021 222 5766.
94. (6) Stanley Road, Jaffna. 021 222 2353
BRANCH : MAHESH & SONS,
3, New Market, Chavakachcheri.

உங்களது பழைய நகைகளைக் கொடுத்து உடனுக்குடன் புதுப்பொலிவுடன் திகழ அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு செய்ய நீங்கள் நாடவேண்டிய இடம்
**வீ.எம்.கே. ஜுவல்லறி**
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0602212989,
021 222 7379.

ஆங்கில மருந்துப் பொருட்கள், பால்மா, செய்தித் தாள்கள், அன்பளிப்புப் பொருட்கள் என்பவற்றைத் தரமாகப் பெற்றுக்கொள்ள
**அம்பாள் பாமசி அன் குறோசறி**
இல: 01, நவீன சந்தை, சாவகச்சேரி.